Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்


மலர் - 19 இதழ் - 12 டிசம்பர்- 2006



எருசலேம் பட்டணத்தில், இயேசுவின் காலந்தொட்டு
இருக்கிறதாக நம்பப்படும் ஓர் ஒலிவ மரத்தின் இன்றைய தோற்றம்.
(கடந்த செப்டம்பர் மாதம் அடியார்களின் பயணத்தின் போது எடுக்கப்பட்டது)

# BIBLE MEDITATION

**TV PROGRAM**




## ஆசானின் அறிவுரையில் ...

1. ஆசிரியர் உரை ........ 1
2. ஜெபம் பண்ணுவது எப்படி ........ 11
3. பெண்கள் பகுதி ........ 15
4. வாலிபர் பகுதி ........ 18
5. சிறுவர் பகுதி ........ 21
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 23
7. மனுஷனைக் குறித்து தேவனுடைய திட்டம் என்ன ? ........ 28
8. தானியேலின் உயர்வுக்கான படிகள் ........ 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 19 DECEMBER - 2006 Issue - 12**


# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

ஆம், சத்தியம் விரும்பிகளுக்கும், பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்கும் பாக்கியம் வாழ்க்கையில் கிடைக்காமல் போய்விட்டதே என்று ஏங்குபவர்களுக்கும் இது ஓர் அரிய வாய்ப்பு.

வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **ஏழு** பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப் படுத்தப்பட்ட **90 பாடங்கள்** அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**குறைந்தது எட்டாம் வகுப்பு படித்திருக்க வேண்டும்.**

வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு பட்டயச் சான்றிதழ் (Diploma Certificate) வழங்கப்படும்.

சேர்ந்து படிக்க விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு **ரூ. 50/-** மணியாடர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

**குறிப்பு :** எங்களிடம் ஏற்கனவே அடிப்படை அஞ்சல் வழிக்கல்வி Basic Bible Course படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

**THIS ADVANCED BIBLE CORRESPONDENCE COURSE AVAILABLE IN ENGLISH ALSO**

ஆசிரியர் உரை

# பெத்லகேமின் மேய்ப்பர்கள்

நம்முடைய பூமிக்குண்டான இவ்வாழ்க்கையில் வருடந்தோறும், மாதந்தோறும், வாரந்தோறும், ஏன் தினந்தோறும் நம்மால் நினைக்கப்படும் சிலபேர் இருப்பார்கள். ஆனால், இப்படி நினைக்கப்படுபவர்கள் எல்லோருமே நம்முடைய அன்புக்குப் பாத்திரவான்களாக, மரியாதைக்கு உரியவர்களாக, நன்றிக்கு ஏற்றவர்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், சில மனிதர்கள், நம்முடைய மனதில் இடம் பிடிக்காதவர்களாக இருந்தாலும் கூட, அவர்களைக் கட்டாயத்தின் பேரிலோ, சூழ்நிலையின் காரணமாகவோ, வேறு வழியில்லாமலோ நினைக்க வேண்டி வரும். இவ்விதம் நினைக்கப்படுபவர்கள், அடுத்த முறை அவர்களை நினைக்க வேண்டிய கட்டம் வரும்வரை சுத்தமாக மறக்கப்படுவார்கள். ஆம், இடைப்பட்ட காலத்தில் அவர்களைப் பற்றிய நினைப்போ, பேச்சோ, மூச்சோ நம்மிடம் அறவே இருக்காது. எப்படி, நான் சொல்லுவது கொஞ்சமாகிலும் சரிதானே!

நான் சொல்லும் இந்தக் கருத்து, உலகத்தவருக்கும், அரசியல்வாதிகளுக்கும் இன்னும் ஏனையவருக்கும் தானே பொருந்தும், மற்றபடி கிறிஸ்தவர்களுக்கும், கிறிஸ்தவத்துக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறதென்று ஒருவேளை நீங்கள் கேட்கலாம். ஆனால், சம்பந்தம் இருக்கிறபடியால் தான் நான் இவ்விதம் கூறுகிறேன். எப்படியெனில், உலகெங்குமுள்ள கிறிஸ்தவ சமுதாயம், இப்படி சிலரை நினைத்துப்பிறகு சுத்தமாக மறக்கும் வேலையைக் கடந்த பல நூறு ஆண்டுகளாக, மிக வெற்றிகரமாக, ஆர்ப்பாட்டத்தோடும், ஆட்டம், பாட்டத்தோடும் செய்து வருகிறது. ஒருவேளை, இப்படி யாரை நினைத்து மறக்கிறார்கள் என்று நீங்கள் கேள்வி எழுப்பினால், உங்களுக்கான பதில், **பெத்லகேமின் மெய்ப்பர்கள்** என்பது தான். இந்தக் கணிணி யுகத்திலும், ஆடு மேய்ப்பவர்கள் நினைக்கப்படுகிறார்கள் என்பது ஓரளவு ஆறுதலைக் கொடுக்கக் கூடியதாக இருந்தாலும், அவர்கள் மறக்கப்படுகிற வேகம் வேதனைக்குரிய ஒன்றாகவே உள்ளது.

ஆம், வருடந்தோறும் டிசம்பர் மாதங்களில் இந்த பெத்லகேமின் மேய்ப்பர்கள் பெரும்பாலான கிறிஸ்தவ சமுதாயத்தால் நினைக்கப்படுகிறார்கள். ஆம், அவர்களைப் போல பொம்மைகளை உருவாக்கி வீடுகளை அலங்கரிக்கிறார்கள். இன்னும், வேதாகம மேய்ப்பர்கள் எப்படியிருந் திருப்பார்கள் என்ற தோற்றத்தைக் கற்பனை செய்து, அவர்களைப் போல சிறு பிள்ளைகளுக்கு வேடமணிந்து, கொண்டாட்டம் என்ற பெயரில் மேடைகளில் வேடிக்கை காட்ட வைத்து, அன்றிரவே அவர்கள் அலமாரியில் தூக்கி வீசப்படுவார்கள். பரலோக தேவனின் பார்வைபட்ட இந்த பெத்லகேமின் மேய்ப்பர்களுக்கு, உலகெங்குமுள்ள கிறிஸ்தவ சமுதாயம் கொடுக்கும் மரியாதை இவ்வளவுதான்.

இப்படி இந்த மேய்ப்பர்கள் ஒரு வேடிக்கைப் பொருளாக இருப்பதற்குத் தான் பரலோக தேவனால் பரிசுத்த வேத எழுத்துக்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறார்களா அல்லது ஏதாவது ஒருவகையில் நமக்குப்

பாடம் கற்றுக் கொடுக்கும் தகுதி படைத்தவர்களாக உள்ளார்களா? தேவனால் கட்டளையிடப்படாத, வேத வசனம் சொல்லாத ஒரு பண்டிகைக்காக, உணவில் ஒரு கறிவேப்பிலை போன்று இவர்களை நாம் பயன்படுத்து வதற்குத் தான் நற்செய்தி நூல்களில் இவர்கள் பற்றி சொல்லப் பட்டிருக்கிறதா? தேவனால் அனுப்பப்பட்ட தூதன், இவர்களைச் சந்தித்த அந்தப் பொன்னான இரவில் இவர்கள் செயல்பட்ட விதம் பற்றி நாம் எப்போதாகிலும் ஆவியின் சிந்தையோடு எண்ணிப்பார்த்துள்ளோமா? சொல்லுங்கள். "வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு" (யோவா 5:39) என்று தானே வசனம் கூறுகிறது.

அன்பானவர்களே, இந்த பெத்லகேமின் மேய்ப்பர்கள் கிறிஸ்தவ சமுதாயத்தால் வருடம் ஒரு முறை நினைக்கப்படுகிறவர்களாக மாத்திரம் இராமல் அருமையான பாடங்களைக் கற்றுக் கொடுக்கும் தகுதி படைத்தவர்களாகவும் உள்ளார்கள் என்பதை நாம் இம்மாதத்தில் தெரிந்து கொள்ள போகிறோம். அதற்கு முன்பாக, மேய்ப்பர்கள் பற்றிப் பொதுவாக வேதாகமம் என்ன கூறுகிறதென்று நமது வழக்கத்தின்படியாகப் பார்த்து விடுவோம்.

ஆபேலின் காலந்தொட்டு இன்றளவும் மனித வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டு வருமானம் ஈட்டித் தரும் தொழில்களில் ஒன்றாக இருப்பது ஆடு மேய்ப்பது. கால வெள்ளத்தில் பல தொழில்கள் அடித்துச் செல்லப்பட்டு, நவீன உலகம் என்ற பெயரில் பல தொழில்கள் நசிந்து போயிருந்தாலும் கூட, இன்றளவும் சொல்லப்படக் கூடியதாக இருக்கும் தொழில் ஆடு மேய்ப்பது. முற்பிதாக்களின் காலத்தைச் சேர்ந்த யோபுவின் நாட்களில் ஒருவரின் செல்வச் செருக்கிற்கு அடையாளமாக சொல்லப்பட்டிருப்பவைகளில் ஒன்று ஆடுகள் (1:3; 42:12). எபிரெய சரித்திரத்தில், ஆடு மேய்ப்பது கனத்திற்குரிய வேலையாகவே கருதப்பட்டுள்ளது. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, 12 கோத்திரப் பிதாக்கள், மோசே இன்னும் தாவீது போன்றவர்கள் ஆடு மேய்ப்பவர்களே. பழைய ஏற்பாட்டில் தேவன் ஒரு மேய்ப்பராக தாவீதால் சித்தரிக்கப்பட்டுள்ளார் (சங். 23) புதிய ஏற்பாட்டில், நமதாண்டவர் தன்னை ஒரு **நல்ல மேய்ப்பன்** என்று அடையாளப்படுத்துகிறார்.

மேய்ப்பனின் வேலை, மற்ற வேலைகளோடு ஒப்பிடும் போது, கொஞ்சம் கடினமானது. ஆடு மேய்ப்பதில் கில்லாடியான யாக்கோபின் வார்த்தைகள் இப்பணி எவ்வளவு சிரமமானது என்பதை நமக்குச் சொல்லும். **"பகலிலே வெயிலும், இரவிலே குளிரும் என்னைப் பட்சித்தது; நித்திரை என் கண்களுக்குத் தூரமாயிருந்தது; இவ்விதமாய்ப் பாடுபட்டேன்"** (ஆதி. 31:40). அதுமாத்திரமல்ல, இது எவ்வளவு ஆபத்தை உள்ளடக்கிய தென்பதை தாவீதின் வார்த்தைகளிலிருந்து தெரிந்து கொள்ள முடியும். "தாவீது சவுலைப் பார்த்து; உம்முடைய அடியான் **என் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிற போது, ஒரு விசை ஒரு சிங்கமும், ஒரு விசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக் கொண்டது. நான் அதைத் தொடர்ந்து போய், அதை அடித்து, அதை அதின் வாய்க்குத் தப்புவித்தேன்; அது என்மேல் பாய்ந்த போது, நான் அதின் தாடியைப் பிடித்து, அதை அடித்துக் கொன்று போட்டேன். அந்தச் சிங்கத்தையும், அந்தக் கரடியையும் உம்முடைய அடியானாகிய நான் கொன்றேன்**....." (1சாமு. 17:34-35).

இப்படி மிஞ்சின பொறுப்பும், மிகுந்த வீரமும் தேவைப்பட்ட இந்த வேலைக்கு இயேசுவின் நாட்களில் உரிய மரியாதை இல்லை. காலத்தின் மாற்றத்தால், பழைய ஏற்பாட்டு நாட்களின் கனமும், மரியாதையும் கரைந்து போய் விட்டதோ என்னவோ தெரியவில்லை. முதல் நூற்றாண்டுக் காலத்தில் இவர்கள் சற்று ஏளனமாகவே எண்ணப்பட்டார்கள். பரிசேயர், வேதபாரகர் போன்றவர்களால் இந்த மேய்ப்பர்கள் அசுத்தமானவர்கள் என்றும் கருதப்பட்டார்கள். மீன்பிடிப்பவர்களையும், வரிவசூல் செய்தவர்களையும் சீடர்களாக தெரிந்து கொண்ட இயேசுவானவர், 12 பேரில் ஒருவனாக ஏன் ஒரு மேய்ப்பனைத் தெரிந்து கொள்ளவில்லை என்பது எனக்குக் கொஞ்சம் விளங்காத ஒன்றாக உள்ளது. ஆயினும், அதற்கு ஒரு பலமான காரணம் இருக்க வேண்டும். அந்தஸ்து ஒரு காரணமாக இருந்திருக்குமானால், கிறிஸ்துவின் பிறப்பு தேவனால் இவர்களுக்கு முதலாவது அறிவிக்கப் பட்டிருக்காது தானே!

சரி, தேவ குமாரன் மானிட உருகொண்டு மண்ணில் உதித்த அந்த இரவில், இந்த மகா செய்தி பெத்லகேமின் மேய்ப்பர்களுக்கு முதன் முதலில் அறிவிக்கப்பட்ட போது, அவர்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்ததாக வசனம் கூறுகிறது. (லூக். 2:8) பகலில் மேய்த்தல், இரவில் காத்தல் இதுதான் அவர்கள் வாழ்க்கை. எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை அறிவிக்க வந்த தூதன் மேய்ப்பர்களுக்கு சொன்ன முதல் வார்த்தை **பயப்படாதிருங்கள்** (லூக். 2:10) என்பது. நம்முடைய பிதாவாகிய தேவனும், இரட்சகராகிய இயேசுவும், அவர்களில் அன்பு கூறுகிறவர்கள் பயப்படுவதற்கு ஒருபோதும் விடுவதில்லை. மரியாளுக்கும் இதே விதமாகத்தான் தேவதூதன் சொல்லியுள்ளான். "**பயப்படாதே நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்**" என்று (லூக். 1:30).

தேவதூதன், இரட்சகரைப் பற்றிய செய்தியை மேய்ப்பர்களுக்கு அறிவித்துச் சென்ற பின்பு, இந்த மேய்ப்பர்கள் ஒருவரையொருவர் நோக்கி, பெத்லகேம் ஊருக்குப் போய், நடந்ததாக நமக்குக் **கர்த்தரால் அறிவிக்கப் பட்ட** இந்த காரியத்தைப் போய்ப் பார்ப்போம் வாருங்கள் என்று சொல்லிப் போய் பிள்ளையைக் கண்டதோடு, பிள்ளையைப் பற்றிய காரியங்களை மற்றவர்கள் ஆச்சரியப்படும் அளவுக்குப் பிரசித்தமும் பண்ணினார்கள் (2:12-20). அத்தோடு தங்களுக்குச் சொல்லப்பட்டதின்படியே கேட்டு, கண்ட எல்லாவற்றிற்காகவும், தேவனை மகிமைப்படுத்தி, துதித்துக் கொண்டு திரும்பிப் போனார்கள் (2:12-20) இதுதான், பெத்லகேமின் மேய்ப்பர்கள் பற்றி நமக்குக் கிடைத்திருக்கும் சுருக்கமான வெளிப்பாடு. இனி இச்சம்பவம் தரும் பாடங்களைப் பார்ப்போம்.

## I மேய்ப்பர்களின் விசுவாசம்

பெத்லகேம் மேய்ப்பர்கள் பற்றி வெளிப்படுத்தப்பட்டிருப்பவை களிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம் அவர்களின் **விசுவாசம்**

பரலோக தேவனைப் பிரியப்படுத்த விரும்பும் ஒருவனுக்கு இருக்க வேண்டிய முதல் லட்சணமே விசுவாசம் தான். இதைத்தான் எபிரெய ஆசிரியர், **விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்** (எபி 11:6) என்று பளிச்செனக் கூறியுள்ளார். தேவனையும் அவருடைய வார்த்தைகளையும் விசுவாசிக்க வேண்டுமென்பது ஆதிமுதல்

அவருடைய கட்டளையாகவும், எதிர்பார்ப்பாகவும் உள்ளது. தேவனுடைய கட்டளையை விசுவாசியாமல் போனபடியால் **தான் முதல்** பாவம் உள்ளே புகுந்தது (ஆதி. 2:17). அன்று முதல் இன்று வரை சாத்தான் போடும் பேயாட்டத்திற்குக் காரணம், அவரால் படைக்கப்பட்டவர்கள் அவர் மீதும், அவருடைய வார்த்தைகளின் மீதும் போதுமான விசுவாசம் வைக்காமல் போனதுதான். இன்றைக்கும் கிறிஸ்தவத்தில் தலைதூக்கியுள்ள பல அலங்கோலங்களுக்குக் காரணம், கிறிஸ்துவின் வார்த்தைகளை விசுவாசிக்க வேண்டிய அளவு விசுவாசியாமல் இருப்பதே.

ஆனால், இந்த பெத்லகேமின் மேய்ப்பர்களோ, தேவனால் **வெளிப் படுத்தப்பட்டவைகளை அப்படியே நம்பி விசுவாசித்திருக்கிறார்கள்.** இதோ, எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள், இதுவே உங்களுக்கு அடையாளம் (லூக். 2:10-12)என்ற வார்த்தையைக் கேட்ட பொழுது எந்த ஒரு ஐயப்பாடும் அவர்கள் மனதில் தோன்றினதாகத் தெரியவில்லை. ஆனால், பழைய ஏற்பாட்டில் நியாயாதி பதிகள் புத்தகத்தில், மனோவாவின் மனைவிக்குக் கர்த்தருடைய தூதனின் வார்த்தை வெளிப்பட்டபோது அதை அப்படியே மனோவா ஏற்றுக் கொள்ளாமல், கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி, "…..ஆ என் ஆண்டவரே நீர் அனுப்பின தேவனுடைய மனுஷர் **மறுபடியும் எங்களிடத்தில் வந்து** பிறக்கப் போகிற பிள்ளைக்காக நாங்கள் செய்ய வேண்டியதை எங்களுக்கு கற்பிப்பாராக என்று வேண்டிக் கொண்டான்" (நியா 13:8) இங்கே மனோவாவின் செயல்பாட்டுக்கும், மேய்ப்பர்களின் செயல்பாட்டுக்கும் பெரிய வேறுபாடு இருப்பதை நாம் காணமுடியும்.

இத்தனைக்கும், இந்த பெத்லகேமின் மேய்ப்பர்களின் பின்னணியைக் கவனித்தால் தேவ வார்த்தைகளை உடனடியாக ஏற்று விசுவாசிப்பதற்கு உகந்த அனுகூலச் சூழல் அவர்களுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. இராப்பகலாக காடுகளில் குடியிருந்தபடியால் தேவாலயக் காரியங்களில் தேவையான தொடர்பு அவர்களுக்கு இருந்திருக்காது. பக்தி வேடமணிந்து திரிந்த பரிசேயர், வேதபாரகரால் அசுத்தமானவர்கள் என்று ஒதுக்கப்பட்ட படியால், இவர்களின் வாழக்கைக்கும், வார்த்தைக்கும் போதுமான மரியாதையும் இருந்திருக்காது. தூதனுடைய வார்த்தைகளை இவர்கள் அலட்சியம் செய்திருந்தால் கூட, ஏன் இப்படிச் செய்தீர்கள் என்று யாரும் இவர்களைப் பார்த்துக் கேட்டிருக்கவும் முடியாது. ஏனெனில், சமுதாயம் இவர்களிடம் பெரிய காரியங்களை எதிர்பார்த்திருக்காது. இருப்பினும் இவர்களின் செயல்பாடும், இவர்களின் விசுவாச நிலைப்பாடும் மெச்சத் தகுந்ததாகவே உள்ளது. மெச்சுவதற்கு மாத்திரமல்ல பின்பற்று வதற்கும் ஏற்றதாக உள்ளது.

இதை வாசிக்கும் அருமையான நண்பரே! தேவக் காரியங்களைப் பொறுத்தளவில் நம்முடைய **விசுவாசம்** எந்தளவு உள்ளது? நம்முடைய பக்தி வாழ்க்கையில் விசுவாசிக்க வேண்டியவைகளை விசுவாசிக்கிறவர்களாக நாம் உள்ளோமா? விசுவாசத்திற்கும், ஞானஸ்நானத்திற்கும், (மாற். 16:16) விசுவாசத்திற்கும், இரட்சிப்புக்கும் (அப். 16:31) விசுவாசத்திற்கும், நீதியின்

கிரீடத்திற்கும் (IIதீமோ 4:7,8) பிரிக்க முடியாத தொடர்பு இருப்பது உங்களுக்கு தெரியுமா? அப்படியானால், ஆவியானவரால் வெளிப்படுத்தப் பட்டிருக்கும் இவைகளை எந்தளவு ஏற்று செயல்படுத்திக் கொண்டுள்ளோம்? மேய்ப்பர்கள் தங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளை அப்படியே விசுவாசித்து அதன்படியே செய்தார்களேயொழிய, மற்றபடி மீண்டும் எங்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்றோ, வெளிப்படுத்தப்பட்டவை போதாது என்றோ சொல்லவில்லை என்பதை நாம் இங்கே கவனிக்க வேண்டும்.

ஆனால், இன்றைய கிறிஸ்தவத்தில் என்ன நடக்கிறது? **தேவ ஆவியினால் அருளப்பட்ட** வேத வசனங்கள் (IIதீமோ 3:16,17) போதாது என்றும், **வேறொரு சுவிசேஷம் இல்லையே** (கலா 1:7) என்ற பவுலின் வார்த்தைகள் பொய்யென்றும் எண்ணிக் கொண்டு, இன்னும் எங்களுக்கு வெளிப்பாடு வேண்டுமென்றும், தரிசனம் வேண்டுமென்றும், அற்புதம் வேண்டுமென்றும், அடையாளம் வேண்டுமென்றும், கேட்பது எந்த வகையில் நியாயமாகும்? "பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையில் கிடத்திருக்க காண்பீர்கள்; **இதுவே உங்களுக்கு அடையாளம்**" என்றவுடன், அதிலே திருப்தி கொண்ட மேய்ப்பர்களின் விசுவாசத்திற்கும், அற்புத அடையாளங்களைக் கேட்கும் கிறிஸ்தவர்களின் செயல்பாட்டுக்கும் எவ்வளவு வேறுபாடு பாருங்கள்!

ஆகவே, நாம் ஒவ்வொருவரும் பெத்லகேம் மேய்ப்பர்கள் போல நமக்கு கொடுக்கப்பட்டுள்ளவைகளை விசுவாசித்து, பூரணப் பிரமாணமாகிய (யாக் 1:25) புதிய ஏற்பாடு போதுமென்று எண்ணி, வருகின்ற புதிய வருடத்தில் கிறிஸ்துவின் உபதேசத்துக்காக வாழ்ந்து நித்திய ஜீவனையும், நீதியின் கிரீடத்தையும் பெற்றுக்கொள்ளுவோம்.

## II மேய்ப்பர்களின் கீழ்ப்படிதல்

பெத்லகேம் மேய்ப்பர்கள் பற்றி நமக்குச் சொல்லப்பட்டிருப்பவை களிலிருந்து நமக்கு கிடைக்கும் அடுத்த பாடம் அவர்களின் **கீழ்ப்படிதல்**.

இயேசு கிறிஸ்துவின் 12 சீடர்களும், அப்போஸ்தலனாகிய பவுலும், உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவித்தார்கள் என்பதை நாம் அறிவோம். உலகத்தை கலக்குகிறவர்களாகவும் (அப். 17:6) சுவிசேஷத்தை உலகெங்கும் (கொலே 1:6) மற்றும் வானத்தின் கீழிலிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் கொண்டு சென்றவர்களாகவும் இருந்தார்கள். இப்படி இவர்கள் செயல்பட்டதற்கு என்ன காரணம்? நிச்சயமாக, இயேசு அவர்களுக்குக் கொடுத்த பிரதான கட்டளை தான். "ஆகையால், **நீங்கள் புறப்பட்டுப்போய்** சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்து ... " (மற் 28:19,20) என்றார். மேலும், சவுலாக இருந்த பவுலை தேவன் அழைத்த போது, தயக்கம் காட்டின அனனியாவிடம் கர்த்தர் என்ன சொன்னார் என்று பாருங்கள் "நீ போ! அவன் புறஜாதிகளுக்கும், ராஜாக் களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிற தற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான் என்றார்" (அப். 9:15) இந்த வசனங்கள் நமக்குச் சொல்வது என்ன! 12 அப்போஸ்தலர்களும், பவுலடியாரும் உலகெங்கும் போனார்கள். ஆனால், எதினிமித்தம் போனார்கள்? போக வேண்டுமென்ற கட்டளை அவர்களுக்கு இருந்தது.

ஆனால், இந்த பெத்லகேமின் மேய்ப்பர்களுக்கான வெளிப்பாட்டைப் பார்த்தால் அவர்களுக்கு **போங்கள், குழந்தையை போய்ப் பாருங்கள்** என்ற கட்டளையே இல்லை (லூக்கா 2:10) "**நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்** என்று தான் உள்ளது". இன்னும் வசனம் 12, "**இதுவே உங்களுக்கு அடையாளம்** என்று தான் கூறுகிறது. எந்த இடத்திலும், மேய்ப்பர்களுக்கு **போங்கள்** என்ற கட்டளை கொடுக்கப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. இருப்பினும் அவர்கள் கீழ்ப்படிந்து சென்றுள்ளார்.

இப்படி இவர்கள் கீழ்ப்படிந்த விதத்தைக் குறித்து வசனம் 15 எப்படி சொல்லுகிறதென்று மீண்டும் பாருங்கள். "**தேவதூதர்கள் அவர்களை விட்டுப் பரேலாகத்திற்குப் போன பின்பு**" என்று. அதாவது இவர்களின் கீழ்ப்படிதல் தேவ தூதர்களினிமித்தம் இருக்கவில்லை. சில நேரங்களில் நாமெல்லாம், நம் கண் முன்னே இருப்பவர்களைப் பிரியப்படுத்த காரியமாற்றுவதுபோல இவர்கள் செய்யவில்லை. தேவதூதர்கள் போன பின்பு **கர்த்தர் நிமித்தம் தங்கள் கீழ்ப்படிதலைக் காட்டியுள்ளனர்.**

அருமைமயானவர்களே, கீழ்ப்படிகிற காரியத்தில், **போங்கள்** என்ற கட்டளை இல்லாமலே தங்கள் கீழ்ப்படிதலைக் காட்டின மேய்ப்பர்கள் எங்கே? செய்யுங்கள், கீழ்ப்படியுங்கள் என்ற கட்டளை பெற்றும் அதற்குக் கீழ்ப்படியா மலிருக்கும் நாமெல்லாரும் எங்கே? பரலோகத்தின் தேவன் நாம் செய்யும்படியாக நமக்குக் கொடுத்திருக்கும் கட்டளைகைள எண்ணிப் பாருங்கள். "விசுவாசமுள்ளவனாகி, ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான். விசுவாசியாதவனோ, ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" என்கிறார் (மாற். 16:16). இது இரட்சிப்புக்காக நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் ஒரு கட்டளை. இன்னும் லூக்கா 15:7ல் "நீங்கள் மனந்திரும்பா மற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" என்றும். மேலும், அத்தேனே பட்டணத்தில் நடந்த மார்ஸ் மேடைப் பிரசங்கத்தில் பவுல், "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார், இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷ ரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்" என்றும் உள்ளது. இவ்வசனங்கள், நாம் மனந்திரும்ப வேண்டுமென்பதற்கான கட்டளை. (அப். 17:3). இந்த எச்சரிப்புகளுக்கும், கட்டளைகளுக்கும் நாம் நமது வாழ்க்கையில் என்ன மரியாதை கொடுத்துக் கொண்டுள்ளோம்? அறியாமையுள்ள காலங்களைத் தான் தேவன் காணாதவர் போலிருந்தார். அறிந்த காலங்களை அல்ல என்பது நினைவில் இருக்கட்டும்.

ஆகவே, வருடத்தின் விளிம்பில் நின்று கொண்டிருக்கும் நாம் ஒவ்வொரு வரும், தேவ சத்தத்திற்குக் கீழ்ப்படிகிற காரியத்தில் இந்த பெத்லகேமின் மேய்ப்பர்களைப் பின்பற்றுவது நல்லது. தேவன் கட்டளை யிடாத கொண்டாட்டங்களுக்காக மாத்திரம் இவர்களை நாம் நினைக்காமல், இவர்களின் மாதிரியைப் பின்பற்றுவோம். வணங்காக் கழுத்துள்ளவர்களாக இருதயத்திலும், செவிகளிலும் விருத்த சேதனமில்லாத வர்களாயிருந்து, பரிசுத்த ஆவியால் கொடுக்கப்பட்ட வார்த்தைகளுக்கு எதிர்த்து நிற்காமல், இறுதி நாளில் நியாயந்தீர்க்கும் புதிய ஏற்பாட்டு வசனங்களுக்கு (யோவா 12:48) நம்மை சமூலமாய் ஒப்புக் கொடுத்து, புதிய ஆண்டில் கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வு வாழ்வோம்.

## III மேய்ப்பர்களின் நற்செய்தி வாஞ்சை

பெத்லகேமின் மேய்ப்பர்கள் பற்றி நமக்கு வெளிப்படுத்தப் பட்டவைகளிலிருந்து கிடைக்கும் இன்னுமொரு பாடம், அவர்களின் நற்செய்தி அறிவிக்கும் வாஞ்சை ஆகும்.

இயேசு ஆண்டவரால் கட்டளை பெற்று உலகெங்கும் நற்செய்தியைத் தூக்கி சென்ற அப்போஸ்தலர்கள், இயேசுவிடம் சுமார் மூன்றரை வருடங்கள் பயிற்சி பெற்றவர்கள். புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும் நற்செய்தியை அறிவிக்கும்படியாகப் பிடிக்கப்பட்ட பவுலடியாரோ மெத்தப்படித்தவர் (அப். 22:3). சிதறிப்போன நிலையிலும் **சுவிசேஷ** வசனத்தைப் பிரசங்கித்த ஆதி கிறிஸ்தவர்கள் (அப். 8:4) எருசலேமில் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெற்ற அப்போஸ்தலர் பாதம் அமர்ந்து தேவ வசனத்தைக் கேட்டவர்கள். இவர்களெல்லாம் நற்செய்தியை அறிவித்ததிலும், நற்செய்தியை அறிவிக்க எண்ணியதிலும் உள்ள நியாயத்தை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இன்னொன்றும் இங்கே கவனிக்க வேண்டி உள்ளது. இவர்களனைவரும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் நற்செய்தி அறிவிக்கும் வேலையை நம்பிக்கையோடும், சாட்சியங்களோடும் செய்துள்ளனர்.

ஆனால், இவர்களோடு பெத்லகேமின் மேய்ப்பர்களை ஒப்பிடும் போது, மேய்ப்பர்களின் செயல்பாடு நமக்கு பிரமிப்பை உண்டு பண்ணுகிறது ஆம், முதலாவது, அறிவியுங்கள் என்ற **கட்டளை** அவர்களுக்கு இல்லை. இரண்டாவது, எப்படி அறிவிக்க வேண்டுமென்ற **பயிற்சி** இல்லை. மூன்றாவதாக, இயேசு உயிர்த்தெழுந்தவராக அவர்கள் முன் இல்லாமல், ஒரு குழந்தை என்ற அளவில் தான் இருந்தார். இருப்பினும், **பிள்ளையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியைப் பிரசித்தம் பண்ணி னார்கள் என்றும், மேய்ப்பராலே தங்களுக்குச் சொல்லப்பட்டதைக் கேட்ட யாவரும் அவைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்** (லூக் 2:17,18) என்றும் உள்ளது. இங்கே பாருங்கள், கேட்ட யாவரும் அவைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்களாம்.

அப்படி அவர்கள் என்ன பிரசங்கித்திருக்க முடியும்? அவர்களோ மேய்ப்பர்கள்; இயேசு பிறந்த பொழுது, அவரைப் பற்றிச் சொல்லுவதற்கு, நமக்கிருப்பது போன்ற பெரிதான சாட்சியங்கள் எதுவும் இருந்திருக்காது. எப்படியெனில், இயேசுவானவர் இன்னும் தன் ஊழியத்தை ஆரம்பிக்க வில்லை, அற்புதங்கள் எதையும் செய்யவில்லை. மரித்தோரை எழுப்ப வில்லை, வேத வசனங்களின்படி பாடுபடவில்லை, சிலுவையிலறையப்பட்டு அடக்கம் பண்ணப்படவில்லை. மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்திருக்க வில்லை. 40 நாள் தான் உயிரோடிருக்கிறவராகத் தரிசனமும் கொடுக்க வில்லை. பரமேறிச் செல்லவில்லை. பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப் பட்ட கிறிஸ்துவின் வார்த்தைகளடங்கிய புதிய ஏற்பாடும் அவர்களுக்கு இல்லை. இந்நிலையில் மிஞ்சிப்போனால், என்ன சொல்லியிருக்க முடியும்? தேவ தூதன் எங்களோடு பேசினார் என்றும், இவர் தான் எதிர்பார்க்கப்பட்ட மேசியா என்றும், தீர்க்கதரிசனம் இவர் மூலம் நிறைவேறி உள்ளது என்றும் சொல்லியிருக்க முடியும்? இவர்கள் சொன்ன இவைகளே மற்றவர்களுக்கு **ஆச்சரியத்தை** உண்டு பண்ணியிருக்கிறது.

அப்படியானால், அருமையானவர்களே, இயேசுவைப் பற்றி நமக்கிருக்கும் காரியங்களை நாம் மனமார மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டால், பிரசித்தம் செய்தால் அது எவ்வளவு ஆச்சரியத்தை ஏற்படுத்துமென்று தயவாய் எண்ணிப்பாருங்கள்! ஆனால், நாம் ஒவ்வொருவரும் மற்றவர்கள் ஆச்சரியப்படும் அளவுக்கு இயேசுவின் காரியங்களைப் பிரசித்தம் செய்து கொண்டுள்ளோமா? இயேசுவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லுகிற நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை மற்றவர்கள் பார்த்து, ஆச்சரியப்படத்தக்க அளவு உள்ளதா? சிந்தியுங்கள். இது எப்படி சாத்தியம் என்கிறீர்களா? அப். 4:13ஐ கவனியுங்கள். "பேதுருவும், யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும், பேதமையுள்ளவர் களென்றும் அறிந்தபடியால் ஆச்சரியப்பட்டார்கள்...." என்றுள்ளது. ஆகவே, நிச்சயமாக, மற்றவர்கள் ஆச்சரியப்படும் காரியங்களை கிறிஸ்துவினிமித்தம் ஒருவன் செய்ய முடியும்.

அப்படியானால், புதிய வருடத்திற்குள்ளாகச் செல்ல எல்லா வகையிலும் ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் நாம் ஒவ்வொருவரும், புதிய ஆண்டில், கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை மற்றவர்கள் ஆச்சரியப் படத்தக்க அளவில் பிரசித்தம் செய்ய நம்மை ஆயத்தப்படுத்துவோம். "சமாதானத்தைக் கூறி, நற்கரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர் களுடைய பாதங்கள் அழகானவைகள்" என்று வேத வசனங்கள் (அப்.10:15) கூறுவது உங்களுக்குத் தெரியுமா? ஒருவேளை, எதிர்வரும் புதிய ஆண்டிலிருந்து இயேசுவின் நற்செய்தியை அறிவிக்க நான் விரும்புகிறேன் என்று நீங்கள் சொன்னால், இதோ ஓர் ஆலோசனை. ஆம், இயேசு ஆண்டவர், **செய்யவும், உபதேசிக்கவும்** தொடங்கினார் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது (அப். 1:2). அதாவது, உபதேசிப்பதற்கு முன், அவர் அதன்படி வாழ்ந்து காட்டினார். ஆகவே, முதலாவது, நீங்கள் நற்செய்தியின்படி இரட்சிப் படைந்து பிறகு உபதேசிக்கத் தொடங்குங்கள். இரட்சிப்படைய வசனங்கள் மிகவும் எளிமையான வழியையே காட்டுகிறது. முதலாவது, விசுவாசிக்க வேண்டும் (மாற் 16:16) பிறகு, மனந்திரும்ப வேண்டும் (அப். 2:38) அடுத்து அறிக்கையிட வேண்டும் (ரோம 10:9,10) அதன் பிறகு பாவமன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெறவேண்டும் (அப். 22:16). இயேசு ஆண்டவரின் மாதிரிப்படி, முதலாவது நாம் செய்ய வேண்டியவைகளைச் செய்து, பிறகு உபதேசிப்பது மிகுந்த பலனுக்கேதுவானதாக இருக்கும். ஆத்துமாக்களை ஆதாயம் செய்கிறவன் ஞானவான் என்று வசனம் கூறுகிறபடியால், அது நமக்கு அநேக ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும்.

ஆகவே, இந்த பெத்லகேமின் மேய்ப்பர்கள் நமக்குக் கற்பித்த இந்தப் பாடங்களை நாம் ஏற்றுக் கொண்டு, விசுவாசித்து, கீழ்ப்படிந்து, நற்செய்தியை அறிவிக்கிறவர்களாகப் புதிய ஆண்டில் வாழ்வோமாக! ஆமென்.



**அனைவருக்கும் இனிய**
**புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.**



# எக்லீசியா வேதாகமக் கல்லூரி

## மாணவர் சேர்க்கை அறிவிப்பு

# EKKLESIA BIBLE COLLEGE

P.O. Box-27, KANGAYAM - 638 701. India.

## STUDENTS ADMISSION NOTIFICATION

**பு**திய ஏற்பாட்டு உபதேசத்தில் முழு நம்பிக்கையும், கிறிஸ்துவின் நற்செய்தியை நானிலம் எங்கும் எடுத்துச் சொல்லவேண்டுமென்பதில் இணையில்லா ஈடுபாடும் கொண்ட **வாலிபர்களிடமிருந்து** விண்ணப்பங்கள் உடனடியாக வரவேற்கப்படுகின்றன. **திருமணமாகி 35 வயதைத் தாண்டாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.**

**காலம்** : **3 வருடம்** (செமஸ்டர் முறை)

**Duration** : **3 Years** (Semester System)

**கல்வித்தகுதி** : **+2 தேர்ச்சி** (அல்லது) **பட்டப்படிப்பு**

**Qualification** : **+2 Pass (or) Any Degree**

**பட்டம்** : **வேதயியலில் இளங்கலை பட்டம்**

**Degree** : **B.B.S.** (Bachelor of Biblical Studies)

**தகுதியுள்ளவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும்**

விபரங்கட்கும், விண்ணப்பங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

## இயக்குநர்

எக்லீசியா வேதாகமக் கல்லூரி
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. இந்தியா
✆ 04257 - 230030, 230603 செல் : 98427 - 30382

# ஜெபம் பண்ணுவது எப்படி?

நீங்கள் இருக்குமிடத்தில் கிறிஸ்துவின் சபை தொடங்குவது எப்படி என்ற தலைப்பின் கீழாக நாம் படித்து வருகிறோம். கர்த்தருடைய சபை இல்லாத ஒரு பட்டணத்திற்கோ அல்லது ஒரு இடத்திற்கோ நீங்கள் செல்ல நேர்ந்து, அங்கு கிறிஸ்துவின் சபையை கண்டுபிடிக்க விரும்பி முயற்சிப் போரின் நிமித்தமாக இக்கட்டுரைத் தொடர் வெளிவருகிறது. நீங்கள் இதுகாறும், கர்த்தருடைய சபையின் அங்கத்தினராக இல்லாவிடில், அங்கத்தினராகும்படி உங்களை ஊக்கப்படுத்துகிறோம். நீங்கள் சத்தியத்தின் படி ஒரு கிறிஸ்தவராக மாறியிருந்தும் அல்லது ஏற்கனவே கிறிஸ்துவின் குடும்பத்தில் அங்கமாக இருந்தும், கிறிஸ்துவின் சபை இல்லாத இடத்தில் நீங்கள் இருக்க நேர்ந்தால், நீங்கள் இருக்குமிடத்தில், ஒரு கிறிஸ்துவின் சபையைத் தொடங்க நங்கள் உதவி செய்ய விரும்புகிறோம். இதைச் செய்வதற்கு, இது பற்றி, தேவன் என்ன சொல்லியிருக்கிறார் என்ற தெளிவான வேத அறிவும், ஆர்வமும், முயற்சியும் இருந்தால், இது போதுமானது. ஒருவேளை, நீங்கள் பேசாமல் அமர்ந்து கொண்டு, யாரோ இதைச் செய்துவிட்டு போகட்டும் என்று இருந்துவிட்டால், இக்காரியம் ஒருபோதும் நடைபெறாமலே போய்விடலாம். இம்மாதிரிச் சூழ்நிலையில், கர்த்தரால் பயன்படுத்தப்பட்டவராக நீங்கள் இருக்கக் கூடும் என்பதை எண்ணிப் பாருங்கள். கர்த்தரால் நாம் பயன்படுத்தப்படுவது எவ்வளவு ஆனந்தமும், சிறப்பான வாய்ப்புமென்று பாருங்கள்.

இந்தப் பாடத் தலைப்போடு சம்பந்தப்பட்ட அநேக முக்கியமான பாடங்களை நாம் இதுவரை பார்த்துள்ளோம். இப்பொழுது, ஜெபம் பண்ணுவது எப்படி என்று தொடர உள்ளோம்.

நீங்கள் ஒரு பிராந்திய சபை தொடங்கி, அங்கு ஆராதனை, வேதபாட வகுப்பு போன்றவற்றைச் செய்ய வேண்டுமெனில், ஜெபம் பற்றியும், அதன் முக்கியத்துவம் பற்றியும் அதை எப்படிச் செய்ய வேண்டுமென்பது பற்றியும் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

முதலாவது, ஜெபம் என்றால் என்ன என்று விளக்குகிறோம். பரலோகத் திலிருக்கிற தகப்பனோடு நாம் பேசுவதற்கு நமக்குக் கிடைத்திருக்கும் ஒரு வழிமுறை தான் ஜெபமாகும். வேறு வகையாகச் சொன்னால், ஜெபம் என்பது, தேவனுடைய பிள்ளைகளுக்குக் கூட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிற ஆசீர்வாதம் அல்லது சிலாக்கியமாகும். ஆனால், தேவனுடைய பிள்ளைகள் என்பவர்கள் யார்? தேவனுக்குக் கீழ்ப்படிந்து, இரட்சிப்படைந்து, கிறிஸ்தவர்களாக மாறினவர்கள். இன்னும், தேவனுடைய ஆவிக்குரிய குடும்பமாகிய கிறிஸ்துவின் சபையில் அங்கமாக இருப்பவர்கள்.

நீங்கள் வேதாகமத்தைப் படித்துப் பார்த்தால், ஜெபமானது, தேவனுடைய மகன் அல்லது மகள் என்ற உறவில் சம்பந்தப்பட்டிருப்ப வர்களுக்குத் தான் உரிமையாக்கப்பட்டிருக்கிறதென்று தெரிந்து கொள்ள

முடியும். இரட்சிப்பைப் பெறாத ஒரு பாவி அதாவது தேவனுடைய பிள்ளை என்ற அந்தஸ்தைப்பெறாத ஒருவன், தன்னுடைய ஜெபம் கேட்கப்படும் என்ற எதிர்பார்ப்போடு தேவனை நோக்கி ஜெபிக்கும் தகுதியைப் பெற முடியாது. இயேசுவால் சுகமாக்கப்பட்ட குருடன் இவ்விதம் சொல்லுகிறான். பாவிகளுக்குத் தேவன் செவி கொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம். ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து, அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார். (யோவா. 9:31).

இந்த மனிதன் ஒரு உண்மையை இங்கு வெளிப்படுத்துகிறான். இவன். பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று சொல்லும் போது, அதாவது அவர்களின் ஜெபத்தைக் கேட்பதில்லையென்று சொல்லும் போது, இதன் பொருள், தேவனுடைய உபதேசங்களுக்குக் கீழ்ப்படிந்து, சத்தியத்தின் படி அவருடைய பிள்ளையாக மாறி, அவரை உண்மையாக ஆராதிக்கும் பொழுது, ஜெபத்தைக் கேட்கிறார் என்பது. பேதுரு "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது" என்று கூறியுள்ளார் (1பேது. 3:12) வெகு காலத்துக்கு முன்பு ஏசாயா தீர்க்கனும் இவ்வாறே கூறியுள்ளார். இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்கு அவருடைய கை குறுகிப்போகவும் இல்லை கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே, அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது (ஏசா 59:1,2).

நம்முடைய ஜெபம் தேவனால் கேட்கப்படுவதற்கு, நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பது அவசியம் என்ற இவ்வுண்மையைப் புரிந்து கொள்ள ஒரு உதாரணமாக தருகிறேன். ஒரு அரசாங்கத்தால் தன்னுடைய குடிமகனுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமையை, சிலாக்கியத்தை அந்நாட்டைச் சேராத ஒருவன் பெற்றுக்கொள்ளும்படி வேண்டினால், எப்படியிருக்குமோ அது போல் தான். அவனுக்கு கிடைக்காது என்பது நமக்கு நன்றாகவே தெரியும். அதைப் போலவே, தன்னுடைய பிள்ளைகளுக்குச் செவிகொடுப்பது போலவே, மனந்திரும்பாத ஒரு பாவியின் ஜெபத்தையும் கேட்டு, அதற்கு தேவன் செவிகொடுப்பாரானால், அவருடைய பிள்ளைகளாக இராதவர்களைக் காட்டிலும் அவருடைய பிள்ளைகள் எந்த வகையில் சிறந்தவர்களாக முடியும்? இரண்டு பேருக்கு கண்டிப்பாக வித்தியாசம் உண்டு. இங்கே தெரிந்து கொள்ள வேண்டியது யாதெனில், ஜெபம் என்னும் சிலாக்கியம் ஒருவனுக்குத் தேவையெனில், அவன் தேவனுடைய பிள்ளையாக மாற வேண்டும்.

வேத வசனங்களில், ஜெபம் பற்றி அதிகமாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆதி கிறிஸ்தவர்கள், அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப். 2:41) மேலும், பவுல், நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து, உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் என்று கூறியுள்ளார் (பிலி. 4:6) இன்னும், யோவான்

அப்போஸ்தலனும், நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம் (1யோவா 5:14,15).

தனிப்பட்ட முறையிலும், சபையாகவும் சேர்ந்து ஜெபிக்க வேண்டு மென்பதை ஊக்கப்படுத்தும் அநேக வேத பகுதிகளை நாம் மேற்கோள் காட்ட முடியும், இருப்பினும், நாம் மனதிலே வைத்துக் கொள்வதற்கு சில குறிப்பான வழிகாட்டல்கள் கொடுக்கப்பட்டுள்ளது. கிறிஸ்து சீடர்களைப் பார்த்து, நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும் படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன். (யோவா. 14:13,14). யோவான் 15-16ல் நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக் கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுப்பார் என வாக்குக் கொடுத்துள்ளார். மேலும் கிறிஸ்து, நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களுக்குச் செய்யப்படும் (15:17) மேற்சொன்ன வசனங்களிலிருந்து, ஒருவன் ஜெபிக்க முடியுமென்றும், அப்படி செய்யப்படும் ஜெபங்கள் கேட்கப்படுவதற்கு, சில நிபந்தனைகள் கொடுக்கப்பட்டிருப்பதையும் நாம் காண முடியும் இதை கர்த்தர் தமது சீடர்களுக்குச் சொல்கிறார் அல்லது அவருக்குக் கீழ்ப்படிந்தவர்களுக்குச் சொல்கிறார். அவரில் நிலைத்திருப்பவர்களுடனும், கிறிஸ்துவுக்குள்ளாகவோ அல்லது அவருடைய சபைக்குள்ளாகவோ இருப்பவர்களுடன் அவர் பேசுகிறார். இயேசுக்கிறிஸ்து நமக்காகப் பரிந்து பேசுகிறவராயிருக்கிற படியால், நம்முடைய விண்ணப்பங்கள் அவருடைய நாமத்தினாலே இருக்க வேண்டும். (1யோவா 2:1) அத்துடன் 1 யோவா 15:14,15ல் நாம் பார்த்தபடி, ஜெபங்கள் அவருடைய சித்தத்தின்படியாக இருக்க வேண்டுவது மிக அவசியம்.

ஜெபம் பற்றி இன்னும் சில காரியங்களை கர்த்தர் சொல்ல வேண்டிய தாயிருந்தது. உதாரணமாக, அவர் சீடர்களைப் பார்த்து, அன்றியும் நீ ஜெபம் பண்ணும் போது, மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும் படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்த தென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ ஜெபம் பண்ணும் போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங் கத்தில் பார்க்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப் பார். அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும் போது, அஞ்ஞானி களைப் போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப் பினால், தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்களைப் போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். (மத். 6:5-8) மனுஷர் காணும்படியாகவும், பார்வைக் காகவும் ஜெபிக்கக் கூடாதென்று சொன்ன கர்த்தர், எப்படி ஜெபிக்க வேண்டு மென்றும் மாதிரியைக் காண்பித்தார். கிறிஸ்து, அப்படி மாதிரியாகச் சொல்லிக் கொடுத்ததை, அநேக பிரிவினைச் சபைகளால், கர்த்தருடைய

ஜெபம் என்று வர்ணிக்கப்பட்டு, தாங்கள் கூடுகையில் திரும்பத் திரும்ப சொல்லப்படுகிறது. இது கர்த்தருடைய ஜெபம் அல்ல. ஆகவே, இதை தனியாகவோ அல்லது சபையாகவோ சொல்லக் கூடாது.

அப்படி திரும்பத் திரும்ப சொல்லப்படுமானால், அது மனுஷர் காண வேண்டுமென்றும், மனுஷரால் கேட்கப்படவேண்டுமென்றும், செய்யப் படுகிற வீண் வார்த்தைகளோடு கூடிய ஜெபமாகிவிடும். கிறிஸ்துவானவர், எப்படி ஜெபிக்க வேண்டுமென்பதற்கு ஆதாரமாக இந்த ஜெபத்தை சொல்லிக் கொடுத்தார் அவ்வளவுதான், அந்த ஜெபத்தில் திரும்பத் திரும்ப சொல் வதற்கு விசேஷம் ஒன்றுமில்லை.

இப்பொழுது, ஒரு சபையாகக் கூடி வரும்போது, கண்டிப்பாக அங்கு ஜெபம் இருக்க வேண்டும். கூடி வருகிறவர்கள் தனியாகவும் ஜெபிக்கலாம். யாராவது ஒருவர் ஜெபத்தை நடத்த, கூட்டாகவும் ஜெபிக்கலாம். கூடி வருகையில், சகலமும் கிரமமாயும், நல்லொழுக்கமாயும் செய்யப்பட வேண்டுமாகையில், ஆண் அங்கத்தினர்கள் அதற்கு முன்னமே, அந்தக் கூடுகையில் எத்தனை ஜெபம் இருக்க வேண்டுமென்றும், யார் யார் அதைச் செய்ய வேண்டு மென்றும் தீர்மானிக்க வேண்டும். அல்லது ஒரு பிராந்திய சபையில் ஒருவருக்கொருவர் அனுசரித்துப் போகும் நிலை இருக்குமானால், அந்த குறிப்பிட்ட கூடுகைக்கு பொறுப்பேற்றிருப்பவரோ அல்லது தலைமை யேற்றிருப்பவரோ, கூடிவந்திருக்கிற ஆண் அங்கத்தினர்களில் ஒருவரை, ஜெபம் செய்யும்படி கேட்டுக்கொள்ளலாம். ஒரு கூடுகையில் அல்லது ஆராதனையில் எத்தனை ஜெபங்கள் வேண்டுமானாலும் இருக்கலாம். ஜெபத்தில் நடத்துபவர், முதலாவது கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதங்களுக்காக நன்றி சொல்ல வேண்டும். சயைார்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய உதவியும், வழிநடத்தலும் கிடைக்கும்படியாக ஜெபிக்கலாம். வியாதியஸ்தர் களுக்காகவும், விசேஷ தேவைகளுக்காகவும் ஜெபிக்கலாம். பாவ மன்னிப்புக்காகவும் ஜெபிக்க வேண்டும். ஜெபிக்கின்ற எல்லா ஜெபங்களும் பரலோகத்தில் இருக்கிற பிதாவை நோக்கியிருக்க வேண்டும். அதுமாத்திர மல்ல, இயேசுவின் நாமத்தில் இருக்க வேண்டும். அதாவது, தேவனை நோக்கி ஆரம்பித்து, இயேசுவின் நாமத்தில் முடிக்கப் படவேண்டும். ஜெபிப்பவர் தெளிவாகவும், கூடிவந்திருக்கிறயாவரும் கேட்கிறவகையில் சத்தமாகவும் ஜெபிக்க வேண்டும். அப்பொழுது, கேட்பவர்கள் அதை தங்களுடைய ஜெபமாகக் கருதி ஆமென் என்று சொல்ல முடியும்.

கூடிவந்திருக்கும் அங்கத்தினர்கள் உட்கார்ந்து கொண்டோ, நின்று கொண்டோ, முழங்காலிட்டோ அல்லது தங்களுக்கு **சௌகரியமான நிலையிலோ ஜெபிக்கலாம்.** ஆனால், எந்த நிலையாக இருந்தாலும் அது தேவனிடத்தில் உங்களது தாழ்மையையும், பயபக்தியையும் காட்டக் கூடியதாக இருக்க வேண்டும். இதை மறந்துவிடாதீர்கள். வேதாகமம் இது பற்றி தெளிவாகக் கூறுகிறது.

கர்த்தருடைய பந்தியின் போதும், பொருளாதார ரீதியாக கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதங்களுக்காக காணிக்கைக்கு முன்பாகவும் ஜெபிக்க வேண்டும். காணிக்கை கொடுக்கப்பட்டதற்குப் பின்பும் காணிக்கைக்காக ஜெபிக்கலாம்.

சபையாகக் கூடி வந்திருக்கும் போது, பெண்கள் ஜெபத்தில் வழி நடத்த அனுமதிக்கப்படவில்லை. இது குறித்து விபரமாக பின்னால் வரும் பாடத்தில் படிக்கலாம்.

**J.C. சோட்**

பெண்கள் பகுதி

# அற்பமாய் எண்ணப்பட்டவள்

**தே**வனுடைய சிருஷ்டிப்பில், உயிருள்ளவைகளில் விலங்கு இனத்திலாகட்டும், மனித இனத்திலாகட்டும் எல்லாம் ஒரே மாதிரியாக இல்லை. தோற்றத்தில் ஒருவேளை சில உயிரினங்கள் ஒத்திருந்த போதிலும் பண்புகளில் மாறுபட்டு காணப்படுகின்றன. சில உயிர்கள் சரீர அவயவங்களில் குறைபாடுகளுடன் படைக்கப்பட்டு விடுகின்றன. ஏன் இந்த வேறுபாடு என்று நாம் நம் சிருஷ்டிகரைப் பார்த்து கேள்வி கேட்க இயலாது. அவரால் வனையப்பட்ட பாத்திரங்களாக நாம் இருப்பதால் அவரது சித்தத்திற்கு ஒப்புக் கொடுப்பதைத் தவிர தேவனைப் பார்த்து கேள்வி கேட்பதற்கு நாம் தகுதியானவர்கள் அல்ல.

ஞானி சாலமோன் அற்பமான ஜெந்துவாகிய எறும்பைப் பற்றி கூறும் போது, **பூமியிலே சிறியவைகளாயிருந்தும், மகா ஞானமுள்ளவைகள் நான்குண்டு. அவையாவன : அற்பமான ஜெந்துவாயிருந்தும், கோடைக் காலத்திலே தங்கள் ஆகாரத்தைச் சம்பாதிக்கிற எறும்பும்** என்று (நீதி 30:24,25) கூறுகிறான். எறும்பு அற்பமாய் எண்ணப்பட்டாலும் ஞானமுள்ளதாயிருக்கிறது. நாம் இங்கு பார்க்கப்போகும் அற்பமாய் எண்ணப்பட்ட ஒரு பெண் ஆதியாகமத்தில் இருக்கிறாள். **லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டாள் என்று கர்த்தர் கண்டு, அவள் கர்ப்பம் தரிக்கும்படி செய்தார்.** (ஆதி. 29:31).

இந்த லேயாள் முற்பிதாக்களில் ஒருவரான யாக்கோபின் தாய் மாமனாகிய லாபான் என்பவனின் மூத்த குமாரத்தி, யாக்கோபு தன் தாயாகிய ரெபேக்காளின் தவறான ஆலோசனையால் வயது சென்ற தன் தகப்பன் ஈசாக்கை ஏமாற்றி ஆசீர்வாதத்தை வாங்கிக் கொண்டு தன் அண்ணன் ஏசாவுக்கு பயந்து தன் மாமன் வீட்டிற்கு ஓடிப்போகிறான். லாபானுக்கு இரண்டு குமாரத்திகள் இருந்தார்கள். மூத்தவள் லேயாள், இளையவள் ராகேல். இந்த லேயாளுடைய கண் கூச்சப்பார்வையுடையதாயிருந்தது.

யாக்கோபு ராகேலை விரும்பி அவளை திருமணம் செய்ய ஏற்பாடுகள் செய்தான். ஆனால் லாபானோ அவனை ஏமாற்றி ராகேலுக்குப் பதில்aக லேயாளை அவனுக்குக் கொடுத்தான். காலையிலே அவள் லேயாள் என்று கண்ட யாக்கோபு லாபானிடத்தில் முறையிட்டான். அதன்பிறகு ராகேலையும் அவனுக்கு மனைவியாகக் கொடுத்தான். லேயாளைப் பார்க்கிலும் ராகேலை அவன் அதிகமாக நேசித்தான். ஆகவே, லேயாளை அவன் அற்பமாக எண்ணினான். அவளுக்கிருந்த அந்தக் கூச்சப்பார்வையால் யாக்கோபு அவளை பூரணமாய் நேசிக்க இயலவில்லை. இந்த நிலையில் தான் கர்த்தர் அவளைக் காண்கிறார். கர்த்தருடைய பார்வை அவள் மேல் பட்டவுடன் அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று கர்த்தர் என் சிறுமையைப் பார்த்தருளினார் என்றாள்.

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரியே, நாமும் கூட அநேக சமயங்களில் அற்பமாய் எண்ணப்படுகிறோம். ஒரு வேளை நாம், நம் குடும்பத்தில், உறவினர்களிடையில், சமுதாயத்தில், இன்னும் சபையில் உரிய மதிப்புடன் இல்லாமல் இருக்கலாம். நாம் கர்த்தரை தேடும்போது நம்முடைய பலவீனங்களை அவரிடம் சொல்லி, கண்ணீர் விட்டு ஜெபிக்கும்போது கர்த்தர் உதவி செய்கிறார். பழைய ஏற்பாட்டில் மாபெரும் தலைவனாக இருந்த மோசே திக்குவாயும், மந்த நாவும், உள்ளவனாக இருந்தான் (யாத். 4:10) ஆனால், பிதாவாகிய தேவன் அவனைத் தெரிந்து கொண்டு தம்முடைய ஜனங்களை வழிநடத்திச் செல்வதற்கு தலைவனாக தெரிந்து கொண்டார். அவன் அதை ஏற்க தயங்கும் போது நீ போ, நான் உன் வாயோடே இருந்து நீ பேச வேண்டியதை உனக்குப் போதிப்பேன் என்கிறார் (யாத். 4:12). புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கும் போது வைராக்கியமாக இருந்து கிறிஸ்துவின் சபையை பல இடங்களில் ஸ்தாபித்த அப்போஸ்தலன் பவுல், தன் சரீரத்தில் பலவீனப்பட்டிருந்தான். சரீரத்தில் குறையுடன் காணப்பட்டான். **என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது என்னை விட்டு நீங்கும்படிக்கு நான் மூன்று தரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன். அதற்கு அவர் என் கிருபை உனக்குப் போதும், உன் பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்று கர்த்தர் சொல்லிவிட்டார் (2கொரி.** 12:7-9).

**ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்திய மானவைகளைத் தெரிந்து கொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப் படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவான வைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவை களையும் தேவன் தெரிந்து கொண்டார்** (1கொரி. 1:27:28). இன்றைக்கு உலகத்தில் கல்விமான்களும், மேதைகளும் உயர்மட்டத்தில் இருப்பவர்களும் உண்மையான சத்தியத்தை புரிந்து கொள்ள மறுக்கிறார்கள், அற்பமாய் எண்ணப்பட்ட நமக்கு புதிய ஏற்பாட்டின் சத்தியம் கொடுக்கப் பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து தம் இரத்தத்தை சிந்தி சம்பாதித்த ஒரே சபையை வெகு சிலர்தான் அடையாளம் கண்டு கொண்டுள்ளனர். கல்விமான்களுக்கு மறைத்து, பேதைகளுக்கும், பாலகருக்கும், வெளிப்படுத்தியுள்ளார். இதை யறிந்து நாம் தேவனுடைய பலத்தோடே உண்மைச் சத்தியத்தை ஓங்கி ஒலிக்க வேண்டும். தம்மை உண்மையாய் நேசிக்கிற அவருடைய பிள்ளைகளின் பலவீனத்தை கர்த்தர் பாராமல் இருப்பதில்லை. அற்பமாய் எண்ணப்பட்ட லேயாள், ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், செபுலோன் ஆகிய ஆறு குமாரரையும் தீனாள் என்ற குமாரத்தியையும் பெற்றெடுத்தாள். யாக்கோபுக்கு பிறந்த 12 பேரும் கோத்திரப்பிதாக்கள் என்றழைக்கப்பட்டனர். அதில் லேயாளுக்கப் பிறந்த லேவியும், யூதாவும் விசேஷமானவர்கள். லேவி கோத்திரத்தார் ஆசரிப்புக் கூடாரத்தில் ஆசாரிய ஊழியம் செய்யத்தகுதி பெற்றனர். யூதா கோத்திரம் மிகவும் விசேஷமானது. நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து யூதா கோத்திரத்தில் அவதரித்துப் பிறந்தார்.

கூச்சப் பார்வையைக் கொண்ட லேயாளின் கர்ப்பப்பிறப்பு விசேஷமான இடத்தைப் பெறுகிறது. ஏனென்றால் கர்த்தர் அவள் அற்பமாக நடத்தப்பட்டதைக் காண்கிறார். அவளுக்கு சரீரத்தில் இருந்த குறை கூச்சப்பார்வை, இன்றைக்கும் நம்மில் அநேகர் பலவீனமுள்ளவர்களாக இருக்கிறோம். கர்த்தர் நம்மைக் காண, நாம் அவருக்கு அனுமதி கொடுக்க வேண்டும். வேதத்தில் நிபந்தனைகளாக கொடுக்கப்பட்டவைகளை நாம் ஏற்று நடக்க வேண்டும். நமக்கு இருக்கும் குறைகளையே பெரிதாக நினைத்து கர்த்தர் நம்மைக் கொண்டு செய்ய இருக்கும் காரியங்களுக்கு நாமே தடையாக மாறிவிடக் கூடாது. நம்முடைய பலவீனங்களைப் பார்த்து ஒருவேளை மற்றவர்கள், **இது இவன் செய்த பாவமா? இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமா?** என்று யோவான் 9ம் அதிகாரத்தில் அந்த பிறவிக் குருடனைப் பார்த்து கேட்டதைப் போல நம்மையும் கேள்விகள் கேட்கக் கூடும். தேவனுடைய நாமம் மகிமைப்படுவதற்காகத்தான் இவ்வாறு பலவீனங்கள் காணப்படுகின்றன என்பதே, இதன் விடை.

அற்பமாய் எண்ணப்பட்ட லேயாளின் வயிற்றில் பிறந்த யூதாவினுடைய வம்சத்தை தேவன் ஆசீர்வதித்தது போல அற்பமாய் எண்ணப்படுகிறோமே என்று அங்கலாய்க்கும் ஒவ்வொருவருக்கும் இயேசு கிறிஸ்து போதுமானவராயிருக்கிறார். அவரிடத்தில் எல்லா ஆசீர்வாதங் களும் இருக்கிறது. ஆனால், அவர் நம்மிடத்தில் எதிர்ப்பார்க்கிற காரியங்கள் என்ன என ஆராய்ந்து வேத வசனங்கள் என்ன சொல்லுகிறதோ அதன்படி நடந்தால் நம்மையும் தேவன் கண்டு நம் சிறுமையை நீங்குவார்.

**ரேச்சல் ராஜநாயகம்**

## மத் 25 :14 30-ல் ஒரு தாலந்தை வாங்கினவன் எதை புதைத்து வைத்தான்

1. எஜமானின் பணத்தை புதைத்து வைத்தான் (25:18
2. தன்னுடைய விசுவாசத்தை புதைத்தான் (25:24)
3. தைரியத்தை புதைத்தான் (25:26).
4. தனக்கு கொடுக்கப்பட்ட நாட்களை புதைத்தான் (25:19).

வாலிபர் பகுதி

# வேதத்தின் மகத்துவம்

**வா**லிப நெஞ்சங்களே உங்களை இந்தக் கட்டுரையின் வாயிலாக மறுபடியும் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். பிரியமானவர்களே, உலகிலேயே அதிகமாக விற்பனையாகும் புஸ்தகம் நம்முடைய பரிசுத்த வேதாகமம் தான். அநேக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதும் நம் பரிசுத்த வேதாகமம் தான் அப்படியிருந்தும் வாலிபர்கள் இன்றைய நாட்களில் வேத வசனங்களை வாசிப்பதில் அதிகமாக அக்கறை செலுத்துவதில்லை அப்படியே வாசித்தாலும் மேல் வாரியாக வாசித்து விடுகின்றனர் அதைத் தியானிப்பதில்லை, அதில் புதைந்து கிடக்கின்ற பொக்கிஷங்களை தோண்டி எடுப்பதில்லை. சங்கீதக்காரன் சொல்லும் போது "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும், பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" என்று சொல்கிறார் (சங்கீதம் 1:2). அநேகர் வேதத்தை தியானித்து படிக்காமலிருப்பதற்கு காரணம் வேதத்தை நம்பாமலிருப்பது தான். சரி, வேதாகமத்தை நாம் ஏன் நம்புகிறோம்? ஏனென்றால், வேதாகமத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் உள்ள ஒற்றுமை நம்மை நம்பத்தூண்டுகிறது. வேதாகமம் ஒரு அறிவியல் புஸ்தகம் அல்ல. ஆனால், அது ஒரு விஞ்ஞானப் பூர்வமான தகவல்களைத் தெரிவிக்கும் போது மிகத்துல்லியமாக இருக்கிறது. இது ஒரு புவியல் புஸ்தகமும் அல்ல. ஆனால், பூகோளத்தைப் பற்றி மிகத் துல்லியமாக தகவல்களைத் தருகிறது. வேதாகமம் ஒரு வரலாற்றுத் தகவலை தெரிவிக்கும் போது எப்போதும் அது சரியாக இருக்கிறது. சரி, இப்போது மனிதன் கண்டுபிடிப்பதற்கு பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே வேதாகமம் வெளிப்படுத்தியிருக்கிற சில விஞ்ஞானப் பூர்வமான தகவல்களை கவனிப்போம்.

## I இரத்தம்

அப்போஸ்தலனாகிய பவுல் மார்ஸ் மேடை பிரசங்கத்தின் போது, தேவனுடைய மகத்துவத்தையும், வல்லமையையும் விவரித்தார் அப்போது அவர் சொல்லும் போது "மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்" என்று பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு சொன்னார். இதில் அடங்கியிருக்கிற உண்மையென்ன வென்றால் தேவன் மனித இனத்தை ஒரே இரத்தத்தினாலே தோன்ற பண்ணியிருக்கிறார் அல்லது படைத்திருக்கிறார். நமக்கு குரங்குகள் உட்பட மற்ற மிருகங்களைக் காட்டிலும் வித்தியாசமான இரத்தம் இருக்கிறது. நம்முடைய இரத்தம் மிருகங்களின் இரத்தத்தைப் போல் இல்லாதபடியால் நாம் மிருகங்களிடமிருந்து வரவில்லை. எனவே, பரிணாமக் கொள்கைக்காரர்கள் நம்புவது, சொல்வது தவறாகும்.

நம்முடைய இரத்தம் மிருகங்களின் இரத்தத்திலிருந்து வேறுபடுவது மாத்திரமல்ல, நமக்கு வித்தியாசமான மாம்சமும் இருக்கிறது. "எல்லா மாம்சமும் ஒரே விதமான மாம்சமல்ல; மனுஷனுடைய மாம்சம் வேறே,

மிருகங்களுடைய மாம்சம் வேறே, மச்சங்களுடைய மாம்சம் வேறே, பறவைகளுடைய மாம்சம் வேறே", (1கொரிந்தியர் 15:39). எனவே நாம் மிருகங்களிடமிருந்து தோன்றவில்லை. ஆனால் நாமும், மிருகங்களும் ஜீவனுள்ள தேவனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம் (ஆதியாகமம் 1:24-27). நவீன தொழில்நுட்பத்தால் இரத்தத்தைப் பற்றி அதிகமாக விஞ்ஞானிகள் கற்றுக் கொண்டு வருகிறார்கள். ஆனால், மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் தேவன் ஒரே இரத்தத்தினாலே சிருஷ்டித்திருக்கிறார் என்பதை அவர்கள் தொடர்ந்து உறுதி செய்வார்கள். இது வேதாகமத்தின் மீது நாம் நம்பிக்கை வைக்கத் தூண்டுகிறது. சரி, மனித இனத்தை தேவன் ஒரே இரத்தத்தினால் சிருஷ்டித்தார் என்பது பவுலுக்கு எப்படித் தெரியும்? ஏனென்றால், இந்த விஞ்ஞானப் பூர்வமான உண்மையை பல நூற்றாண்டு களுக்குப் பிறகு தான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்தார்கள். பவுல் ஒரு மருத்துவரோ அல்லது விஞ்ஞானியோ அல்ல. ஆனால், அவர் ஒரு கூடாரம் கட்டுகிறவர். இந்த உண்மையை உதிர்க்க மனித ஞானத்தை விட மேலான ஞானம் அவருக்கு இருந்திருக்க வேண்டும். இது அவர் 1 கொரிந்தியர் 2:13ல் அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரிய வைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம், என்று சொல்லியிருப்பதன் நம்பகத்தன்மையை அதிகரிக்கிறது.

## II கிருமிகள்

லேவியராகமம் 13,14 அதிகாரங்களில் ஆசாரியனால் எப்படி குஷ்டரோகம் கண்டுபிடிக்கப்படுகிறது குஷ்டரோகம் வந்தால் அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய விளக்கங்களை மோசே கொடுத் திருக்கிறார். குஷ்டரோகம் பிடித்தவன் தனியே குடியிருக்க வேண்டும் என்று மோசேயால் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றும் கூட வியாதியுள்ளவர்கள் மற்றவர்களிடம் தொடர்பு கொண்டால் அவர்களுக்கும் வியாதி பிடித்து விடும் என்பதற்காக மருத்துவமனைகளில் தனியாக வைக்கப்படுகிறார்கள். சிலவகையான தொற்று நோய் பிடித்தவர்களை இப்படி தனியாக வைக்கிறார்கள் ஏனென்றால் கிருமிகள் மூலமாக தொற்றுநோய் பரவுகிறது என்பதை நவீன தொழில்நுட்பங்கள் மூலமாக நாம் கற்றுக் கொண்டி ருக்கிறோம். ஆனால், நாற்பது வருடங்களுக்கு முன்பு எழுதியுள்ள காரியங்கள் நவீன விஞ்ஞானத்தோடு ஒத்துப் போகிறது. ஒன்றுபட்டிருக்கிறது.

## III பூமியின் அமைப்பு

"அவர் பூமி உருண்டையின் மேல் வீற்றிருக்கிறவர்; அதின் குடிகள் வெட்டுக்கிளிகளைப் போல இருக்கிறார்கள்; அவர் வானங்களை மெல்லிய திரையாகப்பரப்பி அவைகளைக் குடியிருக்கிறதற்கான கூடாரமாக விரிக்கிறார்" (ஏசாயா 40:22) கிறிஸ்துவுக்கு முன்பு சுமார் எண்ணூறு வருடங்களுக்கு முன்பு ஏசாயா பூமி உருண்டை என்று எழுதினார். ஆனால் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு மக்கள் பூமி தட்டை என்று நினைத்தார்கள். மேலும் வேதாகமம் பூமியின் நான்கு மூலைகளைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறது இது பூமியின் நான்கு திசைகளைக் குறிக்கிறது. பூமி உருண்டை என்று பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு ஏசாயாவுக்கு எப்படித் தெரியும்? தேவனுடைய வெளிப்படுத்தலினால் தான் ஏசாயாவால் அவருடைய

நாட்களில் இப்படி எழுத முடிந்தது. இந்த விஞ்ஞானப் பூர்வமான உண்மை வேதாகமத்தின் மீது நம்முடைய நம்பகத்தன்மையை அதிகரிக்கிறது. தேவன் மீது விசுவாசத்தையும் அதிகரிக்கிறது.

## IV பூமி அந்தரத்திலே தொங்குகிறது

"அவர் உத்தரமண்டலத்தை வெட்ட வெளியிலே விரித்து, பூமியை அந்தரத்திலே தொங்கவைக்கிறார்" (யோபு. 26:7). சமீப காலங்களில் தான் நாம் புவிஈர்ப்பு சக்தியைப் பற்றி தெரிந்து கொண்டோம். விண்வெளியில் புவிஈர்ப்பு சக்தி கிடையாது. முற்காலங்களில் சிலர் கிரேக்க கடவுளான அட்லஸின் தோள்களில் இருந்தது என்று நம்பினார்கள். சில இடங்களில் இன்னும் பூமியானது ஒரு இராட்சத கடல் ஆமையின் மேல் இருக்கிறது என்ற மூட நம்பிக்கை நிலவுகிறது. ஆனால், இப்போது புவிஈர்ப்பு விதி ஈடுபடுத்தப் படுகிறது. பூமி அந்தரத்திலே தொங்குகிறது என்பதை நாம் அறிவோம். நமக்குத் தெரியும் விஞ்ஞான கண்டுபிடிப்புகளால், ஆனால் யோபுவுக்கு எப்படித் தெரியும்? அநேகமாக யோபு புஸ்தகம் தான் வேதாகமத்தின் பழைய புஸ்தகமாக இருக்க வேண்டும். அப்படியென்றால் யோபுவுக்கு எப்படித் தெரியும்? தேவன் யோபுவுக்கு வெளிப்படுத்தினார். யோபு அதையே எழுதினார். இந்த விஞ்ஞானப் பூர்வமான உண்மையை வேதாகமத்தின் மீது நம்முடைய நம்பகத்தன்மையை அதிகரிக்கிறது.

## V கடல்வழிப் பாதைகள்

கடல்வழிப்பாதையைக் கண்டுபிடித்த "மேத்யு பான்டேய்ன் முரே" என்பவர் ஒரு முறை தன்னுடைய மகன் சங்கீதம் எட்டாம் அதிகாரத்தை வாசிப்பதை கவனித்துக் கொண்டிருந்தார். குறிப்பாக எட்டாம் அதிகாரத்தின் எட்டாம் வசனத்தை கூர்ந்து கவனித்தார். அந்த வசனம் இப்படியாகச் சொல்கிறது. "தேவன் ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங் களையும், கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் மனிதனுடைய பாதங் களுக்குக் கீழ்ப்படுத்தினார்". தேவன் கடலுக்குள் பாதை இருக்கிறது என்று சொன்னால் நிச்சயமாக பாதை இருக்கும். அதை நான் கண்டுபிடிப்பேன் என்று சொல்லி கடல் வழிப்பாதையை மேத்யு பான்டேய்ன் முரே கண்டுபிடித்து மாலுமிகளின் படத்தை வரைந்துக் கொடுத்தார். அதைத்தான் இன்றைய நாட்களில் கடல் வழிப் போக்குவரத்திற்கு பயன்படுத்துகிறார்கள்.

கடல்களில் பாதைகள் இருப்பது தாவீதுக்கு எப்படித் தெரியும்? அவர் மாலுமி அல்ல, அவர் ஒரு மேய்ப்பன் ஆயினும் அவர் கொடுத்த விஞ்ஞானப் பூர்வமான உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு மனிதனுக்குப் பல நூற்றாண்டு கள் பிடித்தது. தாவீது பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதினார் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:16). மனிதன் கண்டுபிடிப்பதற்கு பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு வேதாகமம் வெளிப்படுத்தியிருக்கிற விஞ்ஞானப் பூர்வமான தகவல்கள் இன்னும் அநேகம் இருக்கிறது. கர்த்தருக்குச் சித்தமானால் வருகின்ற மாதங்களில் அதை நாம் பார்ப்போம். இப்படி விஞ்ஞானத்தைப் பற்றியும், புவியியலைப் பற்றியும், வரலாற்றைப் பற்றியும் துல்லியமாக பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு வெளிப்படுத்தி யிருக்கிற வேதப் புஸ்தகத்தை நாம் தியானித்துப் படிப்போம் தேவ ஆசீர்வாதம் பெறுவோம்! கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!.


*பென்னி மார்ட்டின்*

சிறுவர் பகுதி

# பறவைகளிடமிருந்து சில பாடங்கள்

எனதருமை சிறுதம்பி, தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். தொடர்ந்து இம்மாதமும் உங்களோடு கூட தேவனுடைய காரியங்களை கற்றுக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த சிறுவர் பகுதி மூலமாக நீங்கள் தெரிந்து கொள்ளும் காரியங்கள் உபயோகமாகவே இருக்கும் என நம்புகிறேன்.

சரி, இம்மாதம் பறவைகளிடமிருந்து சில பாடங்களை கற்றுக் கொள்ளப் போகிறோம். தேவனுடைய படைப்புகளிலிருந்து மனிதன் அநேக காரியங்களை கற்றுக் கொள்கிறான், தேவனுடைய சிருஷ்டிப்பு எல்லாமே நமக்கு பாடம் புகட்டக் கூடியதாக இருக்கிறது. இப்போது பறவைகளிடமிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம் என்றால், பறவைகளுக்கு மாத்திரம் தான் சிறகுகள் இருக்கிறது. சில பறவைகளால் பறக்க முடியாது ஆனாலும் அவைகளுக்கும் சிறகுகள் இருக்கிறது.




உதாரணமாக தீக்கோழியால் பறக்க முடியாது, ஆனால், அது அதிவேகமாக ஓடும். அதே போல் அண்டார்டிக்கா பகுதியில் காணப்படும் பெண்குயின் பறவையாலும் பறக்க முடியாது, நன்றாக நடக்க கூட முடியாது. ஆனால்,

அவைகளால் நன்றாக நீந்த முடியும். பறவைகளைப் பற்றி இன்னொரு உண்மை என்னவென்றால் உலகிலேயே அதிக வேகமாக பறக்கக்கூடியது இந்த பறவைகள் தான். சில பறவைகளால் மணிக்கு நூறு மைல் தூரம் கூட பறக்க முடியும். இந்த உலகில் சுமார் 8600 வகை பறவைகள் இருப்பதாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். சில வகைப்பறவைகள் வருடத்திற்கு 22,000 மைல்களுக்கு குடி பெயரும் இது கிட்டதட்ட இந்த பறவைகள் உலகத்தை வலம் வருவதற்கான தூரமாகும். சரி, எப்படி பறவைகளால் இவ்வளவு தூரம் பிரயாணிக்க முடிகிறது? இதற்கான பதில் மிக சுலபமாகும். தேவன் பறவைகளை அவ்விதத்தில் உருவாக்கியிருக்கிறார்! பறவைகளுக்கு எந்த தேசமும் எந்த கட்டுப்பாட்டையும் விதிக்க முடியாது. அவைகள் சுதந்திரமாக எங்கும் வலம் வரமுடியும்.



வேதாகமத்தில் சுமார் 50 வகையான பறவைகள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. அதில் குறிப்பிடத் தக்கவைகள் ஆந்தைகள், தீக்கோழிகள், புறாக்கள், அடைக்கலான் குருவிகள், காடைகள் மற்றும் சேவல் ஆகும். தேவன் பறவைகளை சிருஷ்டிப்பின் வாரத்தின் ஐந்தாவது நாள் சிருஷ்டித்தார். நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து சொல்லும் போது, "ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிர்கள் எல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால் பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்" (மத்தேயு 10.29-31) என்று சொன்னார். மேலும் (மத்தேயு 6:26)ல் இயேசு சொல்லும் போது "ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறது மில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை. அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப் பூட்டுகிறார் அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?" என்று சொன்னார். உலகத்தில் உள்ள எல்லா பறவைகளையும் போஷிப்பதுப் பற்றி கற்பனை செய்து பாருங்கள்! ஆனால் தேவன் போஷிக்கிறார், அவைகளை பராமரிக்கிறார். எனவே சிறுபிள்ளைகளாகிய நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் போது தேவன் நம்மையும் பராமரித்துப் போஷிப்பார். தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க சிறுபிள்ளைகளே நீங்கள் தயாரா?.

***R. Abel Rodger Nayagam***

# விசுவாசத்தின் அடிப்படைகள்

பிரியமானவர்களே, இதுகாறும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தேவனை எப்படியாக ஆராதித்தார்கள் என்று நாம் பார்த்தோம். இதுகாறும் நாம் பார்த்த காரியங்களின் சுருக்கத்தை நான் உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். சபை இரட்சிக்கப்பட்டவர்களை உள்ளடக்கியது. அதனுடைய நோக்கம் இயேசு கிறிஸ்து மூலமாக தேவனை ஆராதிப்பதும், சேவிப்பதுமாகும். பவுல் சொல்லும் போது "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்" (கொலோ 3:17)

புதிய ஏற்பாட்டில் மூன்று வகையான ஆராதனை இருக்கிறது. முதலாவது, அறியாமையின் ஆராதனை, பவுல் மார்ஸ் மேடையின் நடுவில் நின்ற போது தன்னைச் சுற்றிலும் அநேக விக்கிரகங்களைக் கண்டார். அதன் பின்பு பவுல் சொல்லும்போது "எப்படியென்றால், நான் சுற்றித் திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்த பொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன், நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே உங்களுக்கு நான் அறிவிக்கிறேன் (அப். 17:23). அந்த மக்கள் அந்நாட்களில் அறியாமல் ஆராதனை செய்தார்கள், சில மக்கள் இந்நாட்களிலும் அப்படியே செய்கிறார்கள். லட்சக்கணக்கான மக்கள் விக்கிரகங்களையும், சொரூபங்களையும் பணிந்து குனிந்து வணங்குகிறார்கள். லட்சக்கணக்கான மக்கள் வேதாகம அறிவு இல்லாமையால் வேறு மதங்களைத் தழுவி இருக்கிறார்கள்.

இரண்டாவது, வீணான ஆராதனை செய்பவர்களைப் பற்றி வேதாகமம் பேசுகிறது. இயேசு சொன்னார், "மனுஷனுடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்". அநேக மக்கள் இந்நாட்களில் இவ்விதமாகத்தான் ஆராதனை செய்கிறார்கள். அவர்கள் தேவனை ஆராதிக்கிறார்கள் இது உண்மை தான், ஆனால், அவர்களுடைய ஆராதனை வீணானது அல்லது செல்லுபடியாகாதது ஏன்? ஏனென்றால் அது மனிதனுடைய போதனையின் படியேயும், பாரம்பரியத்தின் படியேயும் இருக்கிறது. அது தேவனுடைய சித்தத்தின்படி அல்ல.

மூன்றாவது, தேவனுடைய வார்த்தை உண்மையான ஆராதனையைப் பற்றி பேசுகிறது, அதாவது ஆவியோடும், உண்மையோடும் செய்யப்படுகிற ஆராதனையைப் பற்றி பேசுகிறது. கிறிஸ்துவின் வார்த்தைகளை நாம் படிக்கிறோம், "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்" (யோவான் 4:24). இந்த வகையான ஆராதனையை

மட்டும் தேவன் அங்கிகரிப்பார். இது இயேசுவின் நாட்களிலும் உண்மையாயிருந்தது, இந்நாட்களிலும் உண்மையாயிருக்கிறது. தேவனை உண்மையோடு ஆராதிப்பது என்பது புதிய ஏற்பாட்டில் எழுதியிருக்கிறபடிச் செய்வதாகும். தேவன் தம்மை ஆராதிக்கும்படி யாரையும் வற்புறுத்த மாட்டார்.

கர்த்தருடைய சபை எவ்வகையான ஆராதனையில் ஈடுபட வேண்டும்? அறியாமையின் ஆராதனை அல்ல. அது மனிதர்களின் உபதேசங்களாகவோ, அல்லது கற்பனைகளின் படியோ இருக்கக்கூடாது. ஆராதனையானது தேவன் ஏற்றுக் கொள்ளும்படி ஆவியோடும், உண்மையோடும் இருக்க வேண்டும். ஆதிச்சபையானது ஆராதனையின் இந்த ஐந்து பங்குகளிலேயும் ஈடுபட்டது என்பதை நேரடியான கட்டளைகளிலிருந்தும், உதாரணங்கள் மூலமாகவும் புதிய ஏற்பாடு காட்டுகிறது.

1. வசனங்களை **படிக்கும்படி** அவர்கள் கூடி வந்தார்கள். தீமோத்தேயுவுக்கு வேதாகமம் சிறுவயதிலிருந்தே போதிக்கப்பட்டு வந்தது (IIதீமோத்தேயு 3:15). இளம் பிரசங்கியாராகிய தீமோத்தேயுவுக்கு பவுல் புத்திமதி சொல்லும் போது நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப்பகுத்துப் போதிக்கிறவனாயும், உன்னத தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு (IIதீமோத்தேயு 2:15). இது எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும், விசேஷமாக அவர்கள் தேவனை ஆராதிக்கும் போது முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தேவனுடைய வார்த்தைகளைப்படித்தார்கள். இந்த காலக்கட்டத்தில் தான் தேவன் தம்முடைய வார்த்தை மூலமாக தம்முடைய பிள்ளைகளிடத்தில் பேசினார். நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் 20:7ல் வாசிக்கும் போது பவுல் சகோதரருக்குப் பிரசங்கித்தார் இதுவும் தேவனுடைய வார்த்தையைப் படிப்பதில் ஒரு விதமாகும்.

2. அவர்கள் **ஜெபித்தார்கள்.** பெந்தெகொஸ்தே நாளில் மக்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்த பிறகு அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் என்று நாம் வாசிக்கிறோம். அப்போஸ்தலருடைய நடபடிகள் (2.24). ஜெபத்தின் மூலமாக, கர்த்தருடைய ஜனங்கள் பரலோகத்திலிருக்கிற தங்கள் பிதாவினிடத்தில் பேசுவதற்கு வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள்.

3. அவர்கள் **பாடல்களைப்** பாடினார்கள். பவுல் தன்னுடைய சகோதரர்களுக்கு எழுதும் போது "சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக் கீர்த்தனம் பண்ணுங்கள்" என்று சொல்கிறார் (எபேசியர் 5:19) கொலோசெயர் 3:16 யையும், எபிரெயர் 13:15யையும் வாசியுங்கள். இசை இரண்டு வகைப்படும். ஒன்று நம்முடைய குரலைக் கொண்டு எழுப்பப்படும் இசை, இன்னொன்று இசைக்கருவிகளைக் கொண்டு எழுப்பப்படும் இசை தேவன் எவ்வகையான இசையை விரும்புகிறார்? நாம் நம்முடைய இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ண வேண்டும் என்று பவுல் சொல்கிறார். இது இசைக்கருவிகளைக்

கொண்டு எழுப்பப்படும் இசைக்கு முடிவு கட்டுகிறது. ஆதிக்கிறிஸ்தவர்கள் தேவனுக்கு துதிப்பாடல்களைப் பாடினார்கள், சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு மனிதன் அந்த துதிப்பாடல்களோடு இசைக் கருவிகளைப் பயன் படுத்தினான், அவைகளை சேர்த்துக் கொண்டான். தேவன் அதை கட்டளை யிடவில்லை. தேவன் அதை ஏற்றுக் கொள்ளமாட்டார். கிறிஸ்தவர்கள் தேவனுக்கு துதிப்பாடல்களைப் பாடும்போது இசைக் கருவிகளைப் பயன்படுத்த கூடாது.

4. **கர்த்தருடைய பந்தியில்** பங்கு பெறும்படி அவர்கள் கூடிவந்தார்கள். இதற்கான உதாரணம் நமக்கு அப். 20:7ல் இருக்கிறது. மத்தேயு 26:26-28லும் 1கொரிந்தியர் 11:23-34லும் நாம் அப்பம் புசிக்கும்போது கிறிஸ்துவின் சரீரத்தை நினைவு கூற வேண்டும் என்று பார்க்கிறோம். அதே போல கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவு கூறும்படி நாம் திராட்சை ரசத்தைப் பானம் பண்ண வேண்டும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற வேண்டும்.

5. அவர்கள் கர்த்தருக் கென்று காணிக்கைக் **கொடுத்தார்கள்.** பவுல் காலத்தியா மற்றும் கொரிந்துவில் உள்ள சகோதரர்களுக்கு கட்டளையிடும் போது நான் வந்திருக்கும் போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும், தன் தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன் (1கொரிந்தியர் 16:2) கொரிந்தியர் 9:7யையும் வாசியுங்கள்.

இந்த ஆதிக்கிறிதவர்கள் தேவனை ஆராதிக்கும்படி வாரத்தின் முதல் நாள் தோறும் கூடி வந்தார்கள் அப். 20:7 (1 கொரிந்தியர் 16:2) "சபை கூடி வருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டு விடாமல், ஒருவருக் கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்" என்று அவர்களுக்கு எச்சரிப்பு விடுக்கப்பட்டிருந்தது, (எபிரெயர் 10:25). இன்றைய நாட்களிலும் கிறிஸ்தவர்கள், முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் ஆராதனையின் ஐந்து பங்குகளிலேயும் எப்படி பங்கு பெற்றார்களோ அப்படியே பங்கு பெற வேண்டும்.

சபையின் ஆராதனை மிகவும் சுலபமானது, கருத்தானது ஆயினும் அநேகர் இதைக்கடினமாக நினைக்கிறார்கள். ஆராதனையில் நிறைய பாரம்பரியமும், சம்பிரதாயங்களும் இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். மாற்றம் இல்லாத செய்கைகளிலும், ஜெபத்தில் சொன்ன வைகளயே திரும்ப திரும்ப சொல்வதிலும் நம்பிக்கை வைக்கிறார்கள். ஆனால் அது அப்படியல்ல. ஆராதனைப் பற்றி தேவன் தம்முடைய சித்தத்தை வெளிப் படுத்தியிருக்கிறார். அவற்றை எல்லாம் மாற்றுவதற்கு தேவனுடைய வார்த்தையிலிருந்து ஒன்றையும் கூட்டவோ, கழிக்கவோ கூடாது அப்படிச் செய்பவர்கள் மீது தேவன் சாபத்தை உச்சரித்திருக்கிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 22:18,19). தேவன் பேசியிருக்கிறார். அவருடைய ஜனங்கள் கீழ்ப்படிய வேண்டும். அப்போது தான் தேவன் ஆராதிக்கப்படுவார், துதிக்கப்படுவார், கனப்படுத்தப்படுவார்.

அடுத்து நாம் சபையின் பணி என்னவென்று பார்ப்போம். சபை எதற்கு இருக்கிறது? அதனுடைய நோக்கம் என்ன? அதை கண்டுபிடிக்க நாம் தேவனுடைய வார்த்தைக்குச் செல்வோம்.

முதலாவது, சபையானது உலகப்பிரகாரமான வியாபாரத்தில் ஈடு படுவதற்காக அல்ல என்பதை நாம் கவனிப்போம். பணம் சம்பாதிப்பதற்காக மருத்துவமனைகள் நடத்துவதற்காகவோ, அனாதை இல்லங்களை நடத்து வதற்காகவோ சபை அல்ல. இவைகள் எல்லாம் நல்ல காரியங்கள் தான். ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் இவைகளை செய்ய உரிமை உண்டு. ஆயினும் இதுமாத்திரம் சபையின் வேலை அல்ல. இன்றைய நாட்களில் மத உலகில் அநேகர் பணம் திரட்டுவதற்காக மருத்துவ மனைகளையும், அநாதை இல்லங்களையும் நடத்தி வருகிறார்கள். தேவன் தம்முடைய ஜனங்களுக்காக வைத்திருக்கும் திட்டத்திலிருந்து, நோக்கத் திலிருந்து விலகி செல்கிறார்கள்.

தேவனுடைய வசனத்தின் மூலமாக சபையின் பணி மூன்று பகுதிகளைக் கொண்டது என்று நாம் பார்ப்போம். 1) சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது 2) தேவையில் இருப்பவர்களுக்கு உதவிச் செய்தல் 3) சபை பக்தி விருத்தி அடையச் செய்ய வேண்டும். இவைகளை நாம் ஒவ்வொன்றாக பார்ப்போம்.

## சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல்

கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு, பரமேறுவதற்கு முன்பு அப்போஸ்தலர் களிடத்தில் இப்படியாகப் போதித்தார் "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்". ஆமென் (மத்தேயு 28:19,20). பின்பு, அவர் அவர்களை நோக்கி; "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:15,16). பின்பு பவுல் இளம் ஊழியக்காரனாகிய தீமோத்தேயுவுக்கு சொல்லும் போது "சமயம் வாயத்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதை யாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடு, உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்து கொண்டு, புத்தி சொல்லு" என்று சொல்கிறார் (IIதீமோத்தேயு4:2). இவைகளெல்லாம் சுவிசேஷம் பிரசங்கிக்கப் படவேண்டும் என்ற கர்த்தருடைய வாஞ்சையைக் காட்டுகிறது.

இப்போது அப்போஸ்தலருடைய நாட்களில் சபை என்ன செய்தது? அங்கத்தினர்கள் அவர்கள் கர்த்தரால் என்ன செய்யக் கேட்டுக் கொள்ளப்பட்டார்களோ அதைச் செய்தார்கள். அவர்கள் திருவசனத்தைப் பிரசங்கித்தார்கள். அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகம் இதைப் பற்றிய உதாரணங்களால் நிறைந்தது. எல்லா மனமாற்ற சம்பவங்களிலும், பிரசங்கியானவர் கர்த்தருடைய சித்தத்தை போதித்திருப்பதை நாம் காண

முடியும். அப்போஸ்தலருடைய நடபடிகள் 2,8,9,10 மற்றும் 16 ஆம் அதிகாரங்களை வாசித்துப் பாருங்கள். ஆனால், யார் பிரசங்கித்தார்கள், போதித்தார்கள்? எருசலேமில் இருந்த கர்த்தருடைய ஜனங்கள் மீது கொடிய உபத்திரவம் வந்த பிறகு வசனம் சொல்கிறது. "சிதறிப்போனவர்கள் எங்குத்திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்" (அப். 8:4).

கர்த்தர் தம்முடைய வார்த்தை பிரசங்கிக்கப்படவேண்டும் என்று கட்டளையிடுகிறார், பவுல் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும், என்று சொன்னார் (ரோமர் 10:17). கிறிஸ்து சொல்லும் போது "சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று சொன்னார்" (யோவான் 8:32). மேலும் (ரோமர் 10:14)ல் நாம் வாசிக்கும் போது அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்து கேள்விப் படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? இவைகள் எல்லாம் மனிதன் இழந்து போய்விட்டான் என்பதை நமக்குத் தெரிவிக்கிறது (ரோமர் 3:23; 6:23). தேவனுடைய அன்பானது பிரசங்கிக்கப்பட வேண்டும் (ரோமர் 5:8) மேலும் இது மனிதனுக்கு ஒரு இரட்சகர் இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது (யோவான் 3:16). தேவனுக்குக் கீழ்ப்படிவதன் மூலமாக மனிதன் தன்னுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட முடியும் என்பதையும் காட்டுகிறது (ரோமர் 1:16,17; மாற்கு 16:15,16). தேவனுடைய சித்தத்தை அறியாத வர்கள் அல்லது அதற்கு கீழ்ப்படியாதவர்கள் இழந்து போவார்கள் (II தெச லோனிக்கேயர் 1:7-9). எனவே, தேவனுடைய வசனம் பிரசங்கிக்கப்பட வேண்டும். கர்த்தருக்கு சித்தமானால் வருகின்ற மாதம் சபையின் பணியைப் பற்றி இன்னும் சில காரியங்களைப் பார்ப்போம். அதுவரை புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டிருக்கிற தேவனுடைய நேச குமாரனுடைய ஒன்றான மெய் சபையில் தேவனை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்க பாடுபடுவோம்.

**CHARLE DIPALMA** **BENNY MARTIN**

## நாளும் நடப்பும்

1. அரசு உதவி பெறும் உயர்நிலை கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27% இடஒதுக்கீடு மசோதா மக்களவையில் நிறைவேறியது.
2. ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்கள் அடுத்த ஐந்தாண்டும் பதவியில் இருக்க அவரது ஆதரவாளர்கள் கையெழுத்து இயக்கம் ஆரம்பித்துள்ளனர்.
3. ஜப்பானுடன் பொருளாதார உறவை மேம்படுத்த பிரதமர் விரிவான நடவடிக்கை.
4. ஆசிய விளையாட்டுப் போட்டியில் ராணா தங்கப் பதக்கங்கள் வென்று சாதனை.
5. கிரிக்கெட்டிலிருந்து விலகும் நேரம் சச்சினுக்கு வந்துவிட்டதாக விமர்சகர்கள் கருத்து.

# மனுஷனைக் குறித்து தேவனுடைய திட்டம் என்ன?

தேவன் மனுஷனை தம்முடைய சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும், பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் (ஆதி. 1:27) இதோ, மனுஷனை செம்மையானவனாக உண்டாக்கினார்; அவர்களோ அநேக உபாயத்தந்திரங்களைத் தேடிக் கொண்டார்கள் (பிரசங்கி. 7:29) இதினாலே எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையை இழந்து போனார்கள் (ரோம. 3:23) மனுஷன் பாவம் செய்வதினால் அன்பு, சந்தோஷம், சமாதானம், பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகிய மகிமைக்குரிய தன்மைகளை இழந்து கொண்டிருக்கிறான். அவனுடைய எண்ணங்களும், திட்டங்களும் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே இருக்கிறது. ஆனால் தேவனுடைய திட்டத்தில் எவ்விதமான மாற்றமும் இல்லை.

மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் கழித்தும் தேவன் ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாக மனுஷனை "நான் என் **மகிமைக்கென்று** சிருஷ்டித்து உருவாக்கி படைத்தேன்" (ஏசா. 43:7) என்று தேவன் சொன்ன போது அவருடைய திட்டத்தில் எவ்விதமான மாற்றமும் ஏற்படவில்லை என்பது தெளிவாகக் காணப்படுகிறது.

அதன் பின்பும், எத்தனையோ நூற்றாண்டுகள் கழித்து அப்போஸ்தலன் பவுல் மூலமாக தேவன் தம்முடைய திட்டத்தை வெளிப்படுத்தினபோது "நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் **மகிமையை** அடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் (தேவன்) உங்களை அழைத்தார்". (IIதெச. 2:14) என்று எழுதியிருக்கிறார். இந்த அழைப்பு என்றுமே மாறாத அழைப்பு.

இந்நாட்களிலே அநேகர் தேவன் அவர்களை தனிப்பட்ட முறையிலே அழைத்தார் என்று கூறிக்கொள்ளுகிறார்கள். அது எந்த அளவிற்கு உண்மை என்பது தெரியவில்லை. ஆனால், அதை கேட்பவர்கள் எங்களையும் தேவன் அழைக்க மாட்டாரா என்று ஏக்கத்தோடு எதிர்பார்பவர்களாயிருந்தால் அவர்கள் தங்களையே வஞ்சித்து கொள்ளுகிறார்கள் என்பது உறுதி. காரணம் "விசுவாசம் இல்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம் என வேதத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது" (எபிரெ. 11:6) கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. (சங். 19:7) வேதாகமம் நிறைவானது என்று பவுல் கூறுகிறார் (1 கொரி. 13:10) வானமும், பூமியும் ஒழிந்து போனாலும் என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை என்று இயேசு கூறுகிறார் (மத். 24:35) எனவே, நீங்கள் தேவ மகிமையை அடையும்படி வேத வசனத்தின் மூலம் தேவன் உங்களுக்கு கொடுத்த அழைப்பை எக்காரணத்தைக் கொண்டும் அசட்டை பண்ணாதிருங்கள். அது தேவனுடைய திட்டம். அது ஒருபோதும் ஒழிந்து போகாது.

மனுஷன் தேவனுடைய மகிமையை அடைவது அவருடைய சித்தம். எனவே. அந்த மகிமையை அடைந்து கொள்ள இரட்சிப்பின் திட்டத்தை தேவன் ஏற்படுத்தியிருக்கிறார் (II தெச. 2:15) இந்த இரட்சிப்பை மனுஷன் பெற்று கொள்ள அவன் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பது தேவனுடைய திட்டம் (மாற்கு. 16:16) ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் மூழ்கி பெறவேண்டும் என்பது தேவனுடைய திட்டம் (எபே. 5:26) ஆனால், மனுஷரில் அநேகர் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற வேண்டும் என்ற இத்திட்டத்தை மாற்றி போட்டார்கள். இந்த முழுக்கு ஞானஸ்நானத்தை கிறிஸ்துவுக்குள் அதாவது கிறிஸ்துவின் சரீரத்திற்குள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது தேவனுடைய திட்டம் (கலா. 3:27) காரணம்; இயேசுவின் இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இயேசு கிறிஸ்துவின் சரீரத்திற்குள் நமக்கு உண்டாயிருக்கிறது என்று வேதம் கூறுகிறது (எபே: 1:7) கிறிஸ்துவின் இரத்தம் அவருடைய சரீரத்திற்குள் மட்டுமே இருக்கும். எனவே, அவருடைய சரீரத்திற்குள் நாமும் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்படி அவருடைய சரீரத்தை சபையாக (கிறிஸ்துவின் சபையை) நமக்கு தந்திருக்கிறார் (கொலோ 1:24) இது தேவனுடைய திட்டம். எனவே, கி.பி. 33 ம் ஆண்டு வாக்கில் தேவனால் ஸ்தாபிக்கப்பட்ட கிறிஸ்துவின் சபையில் ஆதி முதல் இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர், சேர்த்துக் கொண்டு வருகிறார் (அப். 2:47) தேவனுடைய திட்டத்தில் இன்று வரை எவ்வித மான மாற்றமும் ஏற்படவில்லை. ஆனால், மனுஷர்களோ தேவனுடைய இந்த திட்டத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தி உலகத்தில் சபை என்ற பெயரில் எண்ணற்ற பிரிவினைகளை ஏற்படுத்தி ஒருவன் இரட்சிப்படைய எந்த சபையிலும் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளலாம் என்று மாறுபாடான வைகளை போதித்து தேவனுடைய திட்டத்தை மாற்றிப் போட்டார்கள். தேவனிடத்திலும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை (நித்திய மகிமை) அடைய வேண்டும் என்று தேவன் சித்த மாயிருக்கிறார். "நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்கு செய்த வாக்குத்தத்தம்" (1 யோ. 2:25) அந்த நித்திய மகிமையை அடைந்து கொள்ள கிறிஸ்துவின் சபையாகிய அவருடைய சரீரம் மட்டுமே தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரே வழி. எனவே, இயேசு; நானே வழியும் சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்கிறார் (யோ. 14:6) நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணியிருக்கிறார் (எபி. 10:19) உலகத்தின் முடிவிலே அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமை யையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புகொடுப்பார் (1 கொ. 15:24) இதுவே தேவனுடைய திட்டம்.

இதை வாசித்து கொண்டிருக்கும் நீங்களும் நித்திய மகிமையை அடைந்து கொள்ள வாஞ்சையாயிருப்பதால் தேவனுடைய மாறாத திட்டத்தை மட்டுமே ஏற்றுக்கொள்ளுங்கள்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

*S. ஹென்றி மோகன்*

# தானியேலின் உயர்வுக்கான படிகள்

திருமறை ஆசான் வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள் பல.

கடந்த மாதத்தில் நமது நாட்டில் உள்ளாட்சி தேர்தல் நடந்து முடிந்ததை நாம் அறிவோம். அதில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, உள்ளாட்சி களுக்கு வரலாறு காணாத போட்டிகள் இருந்தன! இதில் தாழ்வு நிலையில் இருந்தவர்கள் அநேகர் உயர்வு நிலைக்கு வந்துள்ளனர் அவர்களின் உயர்வுக்கான படிகள் மக்கள் மத்தியில் செல்வாக்கு இருக்கலாம். கடுமையான உழைப்பு இருக்கலாம் அல்லது சேவை செய்யும் குணநலன் இருக்கலாம். இவைகள் எல்லாம் அவர்களின் உயர்வுக்கான படிகள்.

நம் தேவனுடைய தாசனாகிய தானியேலின் உயர்வுக்கான படிகளை ஆராய உள்ளோம். அதற்கு முன் தானியேலைக்குறித்த சிலவற்றை பார்ப்போமாக!. இவர் பிரதான தீர்க்கதரிசிகளில் ஒருவர். ராஜ பரம்பரையைச் சார்ந்தவர் அழகிலும், அறிவிலும், ஞானத்திலும் சிறந்தவர். கல்வியில் நிபுணர் (தானி 1:3) இவர் யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம் வருஷத்தில் பாபிலோன் ராஜா நேபுகாத்நேச்சார் கி.மு. 604ல் பார்வோன் நேகோ என்னும் எகிப்தின் ராஜாவை வென்று பாலஸ்தீனா வழியாக சென்றபோது தானியேலையும் இன்னும் சில ராஜா புத்திரர்களையும் பாபிலோனுக்கு சிறை பிடித்துச் சென்றான். தானியேலுடன் அவரது நண்பர்கள் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களையும் பாபிலோனுக்குக் கொண்டு சென்றான்.

தானியேல் பாபிலோன் அரண்மனையில் வேலைக்காரனாக இருந்தான். (ஏசாயா 39:7) இவனுக்கு எல்லா விதத்திலேயும் திறமையும் தகுதியும் இருந்தும் ஒரு வேலைக்காரனாக அரண்மனை சேவகனாக இருந்தான். (தானி. 1:3) அரண்மனையிலே பெரிய அந்தஸ்தையோ அலுவலகர் வேலையோ (Officer) எதிர்பார்க்கவில்லை. காரணம் பாபிலோனில் அடிமையாக அழைக்கப்பட்டுள்ளான். அதிலே உண்மையுள்ளவனாக இருந்தான் (தானி 6:4)

கிறிஸ்தவ வேலைக்காரர்களைக் குறித்து தேவன் கூறுவதைப் பாருங்கள். "வேலைக்காரரே நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கும் பயத்தோடும், நடுக்கத்தோடும், கபடற்ற மனதோடும் கீழ்ப்படிந்து மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாய்ப் பார்வைக்கு ஊழியம் செய்யாமல் கிறிஸ்துவின் ஊழியக்காரராக மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். அடிமையானவனானாலும், சுயாதீனமுள்ளவனானாலும் அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவான் என்று அறிந்து மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்லமனதோடே ஊழியஞ் செய்யுங்கள் (எபேசியர் 6:6,8).

தானியேல் தான் அழைக்கப்பட்ட அழைப்பிலே தேவனுக்குக் கீழ்ப்படிந்து மனப்பூர்வமாக கர்த்தருக்கென்று நல்மனசாட்சியோடு பாபிலோனிலே வேலைக்காரனாக உண்மையும், உத்தமுமாக இருந்தான். ஆதலால் தேவன் தானியேலை படிப்படியாக உயர்த்தினார். இவரின் உயர்வைப் படியுங்கள். ராஜா தானியேலை நோக்கி; நீ இந்த மறைபொருளை

(ராஜாவின் சொப்பனத்தையும், அதன் அர்த்தத்தையும் கூறியதை) வெளிப் படுத்தினபடியால் மெய்யாய் உங்கள் தேவனே தேவர்களுக்குத் தேவனும், ராஜாக்களுக்கு ஆண்டவரும் மறை பொருள்களை வெளிப்படுத்துகிற வருமாயிருக்கிறார் என்றான். பின்பு ராஜா தானியேலைப் பெரியவனாக்கி அவனுக்கு அநேகம் சிறந்த வெகுமதிகளைக் கொடுத்து அவனை பாபிலோன் மாகாணம் முழுதுக்கும் அதிபதியாகவும், பாபிலோனிலுள்ள சகல ஞானிகளின் பிரதான அதிகாரியாகவும் நியமித்தான் (தானி2:47,48) மேலும் தானியேல் பெல்ஷாத்சார் நாட்களிலும், தரியு ராஜாவின் நாட்களிலும் மென்மேலும் உயர்த்தப்பட்டான் (தானி 5:29, 6:1-3). படிப்படியான தானியேலின் உயர்வுக்குக் காரணங்கள் என்ன? தானியேலின் உயர்வுக்கான படிகள் என்ன என்பதை கீழே ஆராய்வோமாக.

***<u>1. தன்னை தீட்டுப்படுத்திக் கொள்ளாமல் இருந்தான் (தானி 1:8)</u>***

தானியேலின் உயர்வுக்கு முதல்படி தன்னைத் தீட்டுப்படுத்திக் கொள்ளாமல் இருந்தான் என்பது. எதில் தன்னைத் தீட்டுப்படுத்தாமல் இருந்தான் என்றால் "ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம் பண்ணும் திராட்ச ரசத்தினாலும்" தன்னைத் தீட்டுப் படுத்தாமல் இருந்தான்!.

இன்று நம்மில் எத்தனை பேர் தானியேலைப் போல ராஜ போஜனமும் மதுபானமும் இலவசமாகக் கிடைக்கும்போது தீட்டுப்படுத்திக் கொள்ளாமல் இருப்போம்? இலவசமாய்க் கிடைக்கிறதே என்றும் வரும் வாய்ப்பை விடக்கூடாது என்றும் மாம்ச இச்சையை நிறைவேற்ற நினைப்போம்! ஆனால், "திராட்ச ரசம் குடிப்பது ராஜாக்களுக்குத் தகுதியல்ல" என்று வேதம் கூறுகிறது. (நீதி 31:4)

சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தவர் அனைவருமே கிறிஸ்துவுக்குள் ராஜரீக ஆசாரியக் கூட்டமாக இருக்கிறார்கள் (1பேதுரு 2:9) எனவே துன்மார்க்கத்திற்கு ஏதுவாய் இருக்கிற மதுபானத்திற்கு நாம் அனைவரும் விலகி இருக்க வேண்டும் (எபே 5:18) மதுபானத்தினால் மயங்கித் திரிகிற ஒருவரும் ஞானவானல்ல! (நீதி 20:1) இன்று நிறைய பொறுப்புக்களை வகிப்பவர்கள் கூட மதுபானப் பிரியராய் நடந்து கொண்டு தன்னை தீட்டுப் படுத்திக் கொள்வதை நாம் அன்றாடம் பார்க்கின்றோம்! குடி குடியைக் கெடுக்கும் என்றும் மதுபானம் நாட்டையும், வீட்டையும் அழிக்கும் என்றும் அறிந்தே செயல்படுகிறார்கள்! மதுபானம் என்பது உயர்வுக்கான படிகளல்ல விழுதலுக்கான தடுக்குக் கல்!!

தேவனுக்குப் பிரியமான தானியேல் இவைகளுக்கு தன்னை விலக்கிக் காத்துக் கொண்டபடியால் இந்த உயர்வான எண்ணமும், தீர்மானமும் தானியேலுக்கு இருந்தபடியால் தேவன் இவனுக்கு சகல எழுத்திலும், ஞானத்திலும், அறிவையும், சாமர்த்தியத்தையும் சகல தரிசனங்களையும், சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார் (தானி 1:17).

***<u>2. விசுவாச வீரராக இருந்தான் (எபி 11:33)</u>***

விசுவாச வீரர்களின் பட்டியலில் ஏறக்குறைய 16 வீரர்களை எபிரெய எழுத்தாளர் குறிப்பிடுகிறார். சிலரைக் குறிப்பால், பெயரால் சொல்லாமல் பொதுவாகக் குறிப்பிடுகின்றார். அதில் எபி 11: 33ல் விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள் வாக்குத்தத் தங்களைப் பெற்றார்கள். சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள் என்று கூறுகிறார். இதில் தேவனுடைய தாசனாகிய தானியேல் விசுவாசத்தினாலே சிங்கங்களின் வாய்களை அடைத்த வீரராக திகழ்கின்றார். இது இரண்டாவது படிகட்டு!.


வீரன் என்றுச் சொன்னால் சாதிப்பவனே வீரன்! நாம் கொஞ்ச காலம் இப்பாழுலகில் இருக்கப்போகின்றோம். நாம் விசுவாசத்திற்குரிய காரியத்தில் எதையாகிலும் சாதிக்கின்றோமா? இல்லை மற்றவர்களைப் போல நாமும் வெந்ததைத் தின்று விதி வந்தால் மாள்வோம் என்ற நோக்கில் வாழ்கின்றோமா? விசுவாசத்தினாலே தானியேல் சிங்கங்களின் வாய்களை அடைத்தான்! தானியேல் 6 ஆம் அதிகாரத்தில் விசுவாசத்திற்கு பரீட்சை வந்தது ராஜாவை வணங்கவேண்டும் என்ற கட்டளை பிறந்தது. ஆனால் தேவனுடைய தாசன் தானியேல் ஜீவனுள்ள தேவனையே வணங்கினான் இதனால் தானியேல் சிங்கங்களின் கெபியிலே போடப்பட்டான்! தேவன் தானியேலின் விசுவாசத்தை வைத்து அவனைக் காப்பாற்றினார். விசுவாசத் தினாலே சிங்கங்களின் வாய்களை அடைக்க வேண்டும். உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ வென்று வகை தேடிச் சுற்றித்திரிகிறான். (1பேதுரு 5:8) எனவே தேவனுக்குக் கீழ்ப் படிந்து ஆவியின் பட்டயமாகிய வேத வசனத்தின் மூலமாக அதாவது, விசுவாசத்தினாலே (ரோமர் 10.17) அவனுடைய வாய்களை அடைப்போம்! அதாவது கள்ள உபதேசத்தின் வாய்களை அடைக்க வேண்டும். மேலும் எதிர்த்து பேசுகிறவர்களையும், அடங்காதவர்களையும், வீண் பேச்சுக் காரர்கள், மனதை மயக்குகிறவர்கள், இழிவான ஆதாயத்துக்காக தகாதவைகளை உபதேசித்து முழுக் குடும்பங்களையும் கவிழ்த்து போடுகிறவர்களின் வாயை அடக்க வேண்டும். (தீத்து 1:9-11) இப்படிச் செய்து தானியேலைப் போல வெற்றிப்படிக்கட்டாக உள்ள விசுவாச வீரராக திகழ்வோம்.

### *3. ஜெப வீரனாக இருந்தான் (தானி 6:10,11)*

வாழ்க்கையில் வெற்றி பெற மனிதன் எவ்வளவோ சாதிக்கின்றான் எத்தனையோ தந்திரங்களைச் செய்கின்றான் இருப்பினும் முழுமையான வெற்றி கிடைக்காததால் சோர்வடைகின்றான்! நாம் வாழ்க்கையில் முழுமையான வெற்றி பெற தானியேலைப் போல ஜெப வீரனாக இருக்க வேண்டும். ஜெபமே ஜெயம் என்று மார்தட்டிக் கொள்கிறோம். ஆனால், ஜெப விசயத்தில் கோழைகளாகவும், சோம்பேறிகளாகவும் இருந்து வருகிறோம். எப்படி வாழ்க்கையில் முன்னேற முடியும்? வாழ்க்கையில் வெற்றி பெற முடியும்? இருபத்தைந்து ஆண்டுகளாக ஒரு கிறிஸ்தவரோடு பழகியிருக்கின்றேன் ஆனால் அவர் ஒரு முறையாகிலும் தனக்காகவோ, தன் குடும்பத்திற்காகவோ, சபைக்காகவோ தனிப்பட்ட வாழ்க்கையில் ஜெபித்ததை நான் காணவில்லை! ஆனால், நம் தானியேல் தன் விசுவாசத்திற்கு சோதனை வந்த பொழுதும்கூட தான் செய்து வந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற் படியிட்டு ஜெபம் பண்ணி ஸ்தோத்திரம் செலுத்தினான் அதை மற்றவர்கள் கண்டார்கள். (தானி 6:10,17).

நம்முடைய ஜெப வாழ்க்கை மற்றவர்களுக்கு முன் கொழுந்து விட்டு எரிய வேண்டும். ஜெபம் என்ற அக்கினியின் அனலை மற்றவர்களுக்கு முன்பாகக் காண்பிக்க வேண்டும். இந்த அக்கினியின் தழல் குறைந்து விட்டாலோ அல்லது அணைந்து போய் விட்டாலோ நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் நிச்சயம் தோல்வி அடைந்து விடுவோம். நாம் அனைவரும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக முழங்கால்படியிட்டு பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிப்போம் (பிலி 2:10,11) தேவனுக்கு பிரியமான தானியேல் இப்படிப்பட்ட அனல் கொண்டிருந்ததால் அவனுடைய முழங்காலும், உள்ளங்கைகளும் வடு இருந்ததாகச் சொல்லப் படுகிறது (தானி 10:10) இது இவனுடைய வீரத்தழும்புகளாக கருதப் படுகிறது! எனவே தானியேல் பல உயர்வுகளைப்பெற்றான்.

**(தொடரும்)**



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postal Registration No. Erode / 26 / 2006 - 2008


# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

## Advanced Bible Correspondence Course

ஆம், சத்தியம் விரும்பிகளுக்கும், பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்கும் பாக்கியம் வாழ்க்கையில் கிடைக்காமல் போய்விட்டதே என்று ஏங்குபவர்களுக்கும் இது ஓர் அரிய வாய்ப்பு.

வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 90 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**குறைந்தது எட்டாம் வகுப்பு படித்திருக்க வேண்டும்**

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு: எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்,

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

**த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.**
**தமிழ்நாடு. இந்தியா.**

**திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.**




தமிழன் TV சனி காலை 7.15 - 7.30

தமிழன் TV ஞாயிறு இரவு 9.45 - 10.00

SS மியூசிக் TV திங்கள் காலை 7.00 - 7.15


Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.
Ph : 04257 - 222555, 224555